Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 289

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 · பபாணம. பிலவ ஆனி 17 ஆம் நாள் முஹர்ரம 17 (1-7-61) சனிக்கிழமை · இதழ் 118

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 / 303 / 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

சென்னை பெங்களூர்-2, மதுரை

# இவ்வாரம் குவாய்த்தை

## ஈராக் தாக்கும்?

### வாஷிங்டன் ராஜீய வட்டாரங்களுக்கு தகவல்

### உண்மையை வெளியிட பிரிட்டன் மறுப்பு

வாஷிங்டன் ஜூன் 30

இவ்வார இறுதியில் குவாய்த்தை ஈராக் தாக்கக் கூடும் எனத் தகவல் கிடைத்திருப்பதாய் வாஷிங்டன் ராஜீயவட்டாரங்கள் கூறின. இத்தகவல் எங்கிருந்துகிடைத்தது என்பதை அவைகள் வெளியிடவில்லை.

குவாய்த்மீது தாக்குதல்பற்றி அமெரிக்காவைப் போல் பிரிட்டனுக்கும் தகவல் கிடைத்திருக்கிறதா என்று கேட்கப்பட்டதற்கு, பிரிட்டிஷ் வெளிநாட்டு இலாகா உண்மையை வெளியிட மறுத்துவிட்டது.

குவாய்த்தை ஒரு தனிநாடாகவே இந்தியா கருதி வந்திருக்கிறதென்றும், இனியும் அதை ஒரு தனி சுதந்திர நாடாகவே கருதிவரும் என்றும் புதுடில்லியில் பிரதமர் நேரு நிருபர்களிடம் அறிவித்தார்.

குவாய்த், ஈராக்குக்குச் சொந்தமானது என ஈராக் பிரதமர் உரிமை பாராட்டியதைத் தொடர்ந்து உலகில் பரபரப்பான நிலை ஏற்பட்டிருக்கிறது.

## சீனவிலிருந்து ரயில்வே பெட்டிகள் இறக்குமதி

### பேச்சு வார்த்தை நடத்த திரு. ரம்பாலா செல்வார்

கொழும்பு, வெள்ளி

சீனவிலிருந்து 70 பிரயாணிகள் பெட்டிகளையும், 1000 சாமான் பெட்டிகளையும் இறக்குமதி செய்ய புகையிரதப்பகுதி தீர்மானித்திருக்கிறது. இதற்கு 270 லட்சம் ரூபாய் செலவாகும். புகையிரதப்பகுதி அதிபர் திரு. ரம்பாலா அடுத்த மாதம் 6ம் தேதி இவைகளை வாங்குவது சம்பந்தமாய் சீன செல்ல இருக்கிறார்.

## 101 சட்டவிரோத குடியேற்றக்காரர்கள்

கொழும்பு, வெள்ளி

இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்படுவதற்காக சட்டவிரோதமாகப் பிரவேசித்ததாய்க் கூறப்படும் 101நபர்கள் கொழுப்பிட்டி பொலிஸ்நிலையத்தில்' வைக்கப்பட்டிருந்தனர். இலங்கைமுழுவதுமிருந்து இவ்வித சந்தேக நபர்கள் கொண்டுவரப்படுவதுண்டு. பெரும்பாடும் மன்னரிலிருந்தே அதிகப்தடியானவர்கள் கைது செய்யப்படுவதுண்டு. உத்தரவு பெற்றவுடன் அவர்கள் ரயில், கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்கு அனுப்பப்படுவது வழக்கம்.

## தெய்வச் சிலைகள் திருடப்பட்டன

திருக்கோணமலை, வெள்ளி

ரூ.3000 பெறுமதியான தங்கஆபரணங்களினல் அலங்கரிக்கப்பட்டிருந்த சிவன், சிவகாமி அம்மன் சிலைகள் இங்கு மூர் தெருவிலிருந்த சிவன்கோவிலிலிருந்து திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தின்பேரில் சிலரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

## 'ஒருபோதும் சுதந்திரம் அளியோம்"

### சலஸார் இறுமாப்பு

லிஸ்பன், ஜூன் 30

போர்த்துக்கல்,தன்காலனிகளுக்கு ஒருபோதும் சுதந்திரம் அளிக்காது. இதற்குப் பொருளாதாரக்காரணங்கள் உண்டு," என அந்நாட்டுப்பிரதமர் டாக்டர் ஸலஸார் கூறினர்.

## சூடம், சர்க்கரை

### மாநகரசபைக்கு வரும் பிரேரணை

யாழ்ப்பாணம், சனி

சர்க்கரை, சூடம் என்பன இந்துமத வைபவங்களுக்கும், இந்துக்களுக்கும் முக்கியம் தேவையான பொருட்களாக இருப்பதால் பெர்மிட் மூலமாவது பெற வழி செய்யவேண்டுமென வர்த்தக மந்திரியையும் பிரதம மந்திரியையும் கேட்டுக் கொள்ளும் பிரேரணையை திரு. எஸ். இராசரத்தினம் மாநகர சபையில் சமர்ப்பித்திருக்கிறார்.

## தபால், தந்தி இலாகா மோசடி குற்றச்சாட்டு

### விசாரணை நடத்த கமிட்டி நியமனம்

கொழும்பு, வெள்ளி

தபால் தந்தி இலாகாவில் ஓவர்டயம் சம்பந்தமாக மோசடி நடைபெற்றிருப்பதாய்க் கூறப்படும் குற்றச்சாட்டு மீது விசாரணை நடத்த பொக்கிஷ இலாகா ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறது. வருடம் ஒன்றுக்கு சராசரி 30 லட்சம் ரூபாய் இந்த இலாகா ஓவர்டயமாக வழங்குகிறது. இத்தொகை 1500 அதிகப்படி உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் கொடுக்கப் போதுமானதாகும்.

## 60 வயது குருடர் தேர்தலில் போட்டியிடுகிறார்

சிண்ட்வாரா, ஜூன் 30

எதிர்வரும் பொதுத் தேர்தலில், சிண்ட்வாரா பார்லிமெண்ட் தொகுதியின் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிடுவதற்கு, 60 வயது நிரம்பிய குருடர் ஒருவர் விண்ணப்பித்துள்ளார்.

அப்துல் மஜீத் என்ற பெயருடைய இவர் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளார். சென்ற 40 ஆண்டுகளாக காங்கிரஸ் ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டிருந்ததாக கூறுகிருர். பார்லிமெண்டு தொகுதிக்கு வந்துள்ள 140 விண்ணப்பங்களில், 15 விண்ணப்பங்கள் பெண்களினுடையதென்று தெரிகிறது.

## கல்லோயா தொழிலாளரிடையே அமைதியின்மை

### தற்காலிக வேலை நீக்கம் காரணமாம்

கொழும்பு, வெள்ளி

கல்லோயா அபிவிருத்திச்சபையின் வேலைகள் ஸ்தம்பிதமடைந்திருப்பதாய் அம்பாரையிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. அங்குள்ள 11,000 தொழிலாளர்களிடையே அமைதியின்மை ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணம் எனக் கூறப்

(5ம் பக்கம் பார்க்க)

## "2வது பாண்டுங் மகாநாடு உசிதமான யோசனை இல்லை"

### நிருபர்கள் மகாநாட்டில் பிரதமர் நேரு பேச்சு

புதுடில்லி, ஜூன் 30

பேர்லின் சம்பந்தமாக திரு. குருஷ்சேவும், திரு. கென்னடியும் கடுமையான மனக்கருத்துக்களைக் கொண்டிருப்பதாக பிரதமர் நேரு, இன்று நிருபர்களிடம் பேசுகையில் கூறினர்.

லாவோஸ்பற்றி 3 இளவரசர்களிடையே ஏற்பட்டுள்ள உடன்பாடு, அங்கு புதிய 'நிலைமையைத் தோற்றுவிக்ககூடுமென்றும் அவர் கருத்து தெரிவித்தார்.

திரு. நேரு வங்காள முதன் மந்திரி டாக்டர் பி. ஸி. ராயின் பல மொழி ராஜ்ய யோசனை பற்றியும் குறிப்பிட்டார்.

"டாக்டர் ராயின் துல்லியமான கருத்துக்கள் என்னவென்பது எனக்குப் புரியவில்லை. இப்போதுகூட எல்லா ராஜ்யங்களும் பல மொழி ராஜ்யங்களாகவே விளங்குகின்றன" என்ருர்.

"புதுடில்லியில் நடைபெற்ற முஸ்லிம் மகாநாட்டின் தீர்மானங்களில் ஆட்சேபமான அம்சங்கள் எதுவும் இல்லை. ஆனல் அங்கு நிகழ்த்தப்பட்ட பல உரைகள்தான் எனக்கு வேதனை அளித்தது. முஸ்லிம்கள் இரண்டாம் தரப் பிரஜை

(5-ம் பக்கம் பார்க்க)

விரைவில் வெளிவரும்

ஈழநாடு

EELA NADU

வாரப் பதிப்பு

★

ஈழநாடு வாரப் பதிப்பில் வெளியிடுவதற்குச் சுவையான சிறு கதைகள், இலக்கியம், கலை, கல்வி, விஞ்ஞானம், பொருளாதாரம், கைத்தொழில்-விவசாயம், சமூகப் பிரச்சினைகள் சம்பந்தமான கட்டுரைகளை அன்பர்கள் அனுப்பி வைக்கலாம். பிரசுரமாகும் கதைகள், கட்டுரைகளுக்குச் சன்மானம் அளிக்கப்படும்.

தாளில் ஒரு பக்கத்தில் எழுதவேண்டும். பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளாதவற்றைப் பெற விரும்புவோர் அவற்றுடன் போதிய தபால் முத்திரை அனுப்பி வைக்கவேண்டும்.

கார்ட்டூன் படங்கள் வரைவதில் அனுபவமுள்ளவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

63, சிவன் கோவில் மேலை வீதி,
தபாற் பெட்டி எண்: 49
யாழ்ப்பாணம்.

ஆசிரியர்,
ஈழநாடு.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.

### விற்பனைக்கு

EN A 50 கறுப்பு நிறம் 6000 தொடர்பிலக்கமுள்ள நல்ல நிலைமையிலுள்ள கார் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: போன்: 689. 221/3, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் அல்லது பார்வதி அச்சகம் யாழ்ப்பாணம்.

### தேவை

யாழ்ப்பாணத்தில் நன்கு ஸ்தாபிக்கப்பெற்றுள்ள பண உதவி ஸ்தாபனத்திற்கு ஏஜெண்டுகளும், வெளிவேலை உத்தியோகஸ்தர்களும், மாதச் சம்பள அடிப்படையில் வேலை செய்வதற்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தேவை. ஆண்-பெண் இருபாலாரும் 10 சத முத்திரையுடன் மனுச் செய்க.

தலைமை அலுவலகத்திற்கும் கொடிகாமம் கிளை நிலையத்திற்கும் நம்பிக்கை வாய்ந்த காஷியர் - கிளார்க் தேவை. இத்துறையில் ஆர்வமுள்ள ஆண் - பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

The Secretary, Free Lanka Benefit Corporation, 9/1, Momsac Building, Stanley Rd., Jaffna.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி: யாழ்ப்பாணம்.

### ஆயுள்வேத அரிய மருந்துகள்

புற்றுநோயை (Cancer) வேரறுக்குமென செயல் மூலம் நிரூபிக்கப்பட்ட மருந்து "யோகீஸ்வர ரசம்." தாய்க்குலத்தாருடைய பெரும்பாடு—வெள்ளை இறைத்தல் முதலியன எட்டு நேரத்துடன் குணமடையச் செய்யும் மருந்து "பெரும்பாடு நிவாரணி." தாமதமின்றிக் கலந்தாலோசியுங்கள்.

**பொ. செல்லையா** "புற்றுநோய் நிபுணர்", ஆயுள்வேத வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

A50 கேம்பிறிஜ் (Cambridge) EN 7000 தொடர்பிலக்கமுள்ள கறுப்பு நிறமான கார் நல்ல நிலைமையிலிருக்கிறது. விலை ரூ. 7000-00த்திற்குமேல். காரை காலையிலும் மாலையிலும் பார்வையிடலாம். 15A, கன்னதிட்டி ரோட், யாழ்ப்பாணம்.

### தேவை

நல்ல நிலைமையிலுள்ள மோட்டார் வான் ஒன்று தேவை. விபரங்களுடன் விலையையும் குறிப்பிட்டு, தலைவர், பலநோக்குக் கூட்டுறவுச் சமாசம், பண்டத்தரிப்பு என்ற விலாசத்திற்கு எழுதவும்.

பாண்சுடுவதில் சிறந்த அனுபவமுள்ள பேக்கர் (Baker) ஒருவரும் துணை பேக்கரும் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடனும் முந்திய அனுபவங்களுடனும், தலைவர், பல நோக்குக் கூட்டுறவுச் சமாசம், பண்டத்தரிப்பு என்றவிலாசத்திற்கு எழுதவும்.

### விற்பனைக்கு

கந்தர்மடச் சந்திக்கருகாமையில் 3 பரப்புக்காணி, கல்வீட்டுடன் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். 91/10, பலாலி வீதி, கந்தர்மடம்.


# மன்னாரில் கூட்டுறவு வங்கி

மன்னார், வெள்ளி

'இக்கூட்டுறவு வங்கி ஒரு கற்பக விருட்சம் போன்று இங்குள்ள மக்களுக்கு உதவி புரியும். கடன் பெறவும், விளைபொருள்களுக்குத் தேவையான பணத்தொகையைப் பெறவும் இந்த வங்கி மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். எனவே, இந்த வங்கியை உங்கள் வங்கியென்றெண்ணி ஒத்துழைப்புத் தர வேண்டும். இதை ஆரம்பிக்க உதவி செய்த திரு. வியனகேயை நாம் பாராட்டுகின்றோம்'. இவ்வாறு மன்னார் மாவட்டக் கூட்டுறவு வங்கியைத்திறந்து வைத்துப் பேசுகையில் வங்கியின் தலைவரும் மன்னார் அரசாங்க அதிபருமான திரு. என். பி. ஜெகநாதன் கூறினார்.

வங்கி உப-தலைவர் திரு. எம். அலக்சாண்டர் பேசுகையில் கூறியதாவது:-

மன்னார் மாவட்டத்துக்கு ஒரு கூட்டுறவு வங்கி மிகவும் அவசியமானதொன்று. இதை உருவாக்க திரு. ஜெயராஜா எடுத்த முயற்சி போற்றத் தக்கது.

சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. இராசரத்தினம் கூறியதாவது:-

மன்னார் மாவட்ட மக்களுக்கு இன்று ஒரு பொன்னாளாகும். காலபோக வேளாண்மைச் செய்கை நாட்களில் மக்கள் பணம் இல்லாமல் கஷ்டப்பட்டதை நான் உணர்வேன். இவ்வித கஷ்டம் மக்களுக்கு இனி ஏற்படாது வங்கி கவனித்துக் கொள்ளும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

திரு. எஸ். எம். போல் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# சன சமூக நிலைய வருடாந்தக் கூட்டம்

சங்கானை, வெள்ளி

சங்கானை, தொட்டிலடி சன சமூக சேவா சங்கத்தின் பன்னிரண்டாவது ஆண்டுவிழா, சங்கானைப் பட்டினசபை உப தலைவர், திரு. க. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்றது.

சங்க மாணவிகள் பாட்டும், நடனமும் நிகழ்த்தினார்கள்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர் க. அம்பலவாணர், உபதலைவர் க. கந்தையா, காரியதரிசி ஆ. முருகேசு, உப காரியதரிசி க. இராமலிங்கம், தனாதிகாரி க. கனகலிங்கம்.

நிர்வாகசபை அங்கத்தவர்களாக வி. பாலரத்தினம், த. சேனாதிராசா, ஆ. வேலுப்பிள்ளை, நா. நடராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நூல் நிலையப் பொறுப்பாளர் க. தில்லையம்பலம். கணக்குப் பரிசோதகர்கள் க. கிருஷ்ணபிள்ளை, வீ. நாகலிங்கம்.

திரு. ஆ. முருகேசு நன்றியுரை கூறினார்.

# இந்தியப்பிரஜைகளாக சம்மதித்தவர்களுக்கு வரி விலக்கு

கொழும்பு, வெள்ளி

இந்தியப் பிரஜைகளாகப் பதிவுசெய்துகொள்ள 1954ம் வருடத்தில் சம்மதமளித்த நாடற்ற பிரஜைகளுக்கு விசா வரியிலிருந்து விலக்களிப்பதென்று அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது.

விசாவுள்ள சிலர் இலங்கையில் நீண்டகாலமாக வசித்து வந்துள்ளனரென்றும் இவர்கள் இந்தியப் பிரஜைகளாகப் பதிவுசெய்துகொள்வதற்கு 1954ம் வருடத்தில் சம்மதம் தெரிவித்திருந்தார்களென்றும் இலங்கை அரசாங்கத்திடம் இந்திய ஹைகமிஷன் தெரிவித்திருந்தது.

இவர்களுக்கு விசாவரியிலிருந்து விலக்களிக்க இலங்கை அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. ஜுலை 8ந் திகதிக்குமுன் விசாவரி செலுத்தவேண்டியவர்கள் 33,000 பேர் இருக்கிறார்களென்றும் இவர்களில் சுமார் 20,000 பேர் விசா காலாவதியான பின்னரும் இலங்கையில் தங்கியிருப்பதாகத் தோன்றுகிறதென்றும் குடியேற்ற வெளியேற்ற இலாகா கட்டுப்பாட்டதிகாரி தெரிவித்தார்.

## 'கொள்கை மாறுத கட்சி'

பிலியந்தல, வெள்ளி

"சமயத்துக்கோ மொழிக்கோ பண்பாட்டுக்கோ எது விதமான மதிப்பும் கொடாத மார்க்ஸியவாதிகளுக்கு இந்நாட்டில் இடமேயில்லை."

இவ்வாறு கொழும்பு தெற்கு முதலாவது எம். பி. திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அத்திடியாவில் நடைபெற்ற தேர்தல் கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறியதாவது:

"ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியினரது அரசாங்கத்துக்கு ஆதரவு அளித்ததன் காரணத்தால் இலங்கை சமசமாஜக் கட்சி இருபத்தைந்து வருட காலமாகக் கையாண்டு வந்த இலட்சியங்களுக்கும் சேவைகளுக்கும் பங்கம் விளைந்துள்ளது. யு. என். பி. எந்தக் காலத்திலும் தனது கொள்கைகளிலிருந்தும் மாறவில்லை. எனவேதான் இது நாட்டில் இன்று பிரபலம் வாய்ந்தகட்சியாக விளங்குகின்றது."

## ரப்பருக்கு பதில் தேயிலை

கொழும்பு, வெள்ளி

போதிய வருமானம் தராத ரப்பர் தோட்டங்களில் ரப்பர் மரங்களுக்குப் பதிலாக தேயிலைச் செடிகளை நாட்டும் புதிய திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்துள்ளது.

இத்திட்டத்தின்படி ரப்பர் தோட்டச் சொந்தக்காரர்களுக்கு ரப்பர் மரங்களுக்குப் பதிலாக தேயிலைச் செடிகளை நாட்டி வளர்ப்பதற்கு ஏக்கருக்கு 1,500 ரூபாய்வீதம் உதவிப் பணம் வழங்கப்படும்.

மொரவாக்கோரளை, இரத்தினபுரிப் பகுதியிலேயே இத்திட்டம் பெரும்பாலும் அமுல் நடத்தப்படும்.

## விநாயகர் அபிஷேகம்

முள்ளியவளை, வெள்ளி

வெள்ளா முள்ளிவாய்க்கால் குருந்தடி சிவலிங்கவிநாயகர், கரையா முள்ளிவாய்க்கால் குமாரகணபதிப்பிள்ளையார் வருடாந்த அபிஷேகங்கள் இம்முறையும் இங்கு சிறப்பாக நடைபெற்றன.

# யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்ப கல்லூரி -சுருக்கெழுத்துவேகப் பரீட்சை மாணவர் ஆட்சேபம்:

யாழ்ப்பாணம், சனி

இம்மாதம் 28-ந் திகதி காலையில் நடைபெற்ற தமிழ் சுருக்கெழுத்துப்பரீட்சைக்குத்தெரிந்தெடுக்கப்பெற்றவினுத்தொகுதி குறித்து ஆட்சேபனை தெரிவிக்கும் கடிதமொன்றை யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பப் பாடசாலை மாணவர்கள், அப் பாடசாலை அதிபர் மூலம் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அதிபருக்கு அனுப்பிவைத்திருக்கிறார்கள். அன்று நடைபெற்ற தமிழ் சுருக்கெழுத்து வேகப் பரீட்சையை நிராகரித்து இன்னொரு பரீட்சை வைக்க ஏற்பாடு செய்யுமாறும் அதில் கேட்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

சுருக்கெழுத்தாளருக்கான வேகப்பரீட்சைக்கு தெரிவு செய்யப்படும் தொகுதி ஒரு மொழி பெயர்ப்பதாக அமைவது உலக வழக்கமில்லை. தமிழ்மொழியில் வேண்டிய தொகுதிகள் இருக்க இத்தொகுதி ஆங்கிலத்திலிருந்து பெயர்க்கப்பட்டுள்ளது. வேதனைதரும் ஒரு விஷயமாகும்.

பெரும்பாலும் ஒவ்வொரு வசனமும் தமிழ் இலக்கண வரம்புக்கோ அன்றேல் சாதாரண தமிழ் நடைக்கோ அப்பாற்பட்ட ஒரு புதுவகை அமைப்பைப் பெற்றிருப்பது விசனிக்கத்தக்கது. சம்பந்தமில்லாத - அர்த்தமற்ற சொற்கோவைகளைக் கொண்ட பகுதி சுருக்கெழுத்து வேகப் பரீட்சைக்கு கொடுக்கப்படுவது தான் முறையா?

பரீட்சைக்குக் கொடுக்கப்பட்ட தொகுப்பிலிருந்து சில பகுதிகளை இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அதிபருக்கு அனுப்பியிருந்த கடிதத்தில் சுட்டிக் காட்டியிருக்கும் மாணவர்கள் அதில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

ஒரு வருடகாலம் பயின்று இறுதிப் பரீட்சைக்கு அமர்ந்த எமக்குப் பெரும் ஏமாற்றமான பரீட்சையாக இது அமைந்துவிட்டது. சுருக்கெழுத்தாளன் எப்பகுதியும் எழுத ஆயத்தமாக இருக்கவேண்டுமென்பது உண்மை தான். ஆனால், இப்படியான கரடு முரடானதும், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாததுமான சொற்களையும், வசனங்களையும் அமைத்து எம்மை அல்லலுற வைத்துவிட்ட இதன் பொறுப்பாளரின் நோக்கம் தான் யாது?

## ரூ. 55 கோடி வருமானம்

### இந்தியாவின் சணல் பை வியாபாரம்

புதுடில்லி, ஜுன் 30

உலகிலேயே சணல் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் பாரதநாடு சென்ற வருடத்தில் சணல்பை ஏற்றுமதி செய்ததன் மூலம் 55 கோடி 30 லட்சம் ரூபாய் சம்பாதித்தது.

இந்தியாவிடமிருந்து ஆஸ்திரேலியாதான் அதிக அளவில் சணல்பை வாங்கியிருக்கிறது. சென்ற வருடத்தில் சுமார் எட்டுக்கோடி ரூபாய்க்கு ஆஸ்திரேலியா சணல்பை வாங்கியது. ஆஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாக கியூபாவும் மூன்ருவதாக அமெரிக்காவும் நான்காவதாக சோவியத் ரஷ்யாவும் இந்தியாவிடமிருந்து சென்ற வருடத்தில் சணல் பைகளை வாங்கியிருக்கின்றன.

## ஓய்வு பெறும் டி. ஆர். ஓ.

யாழ்ப்பாணம், சனி

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கான புதிய திட்டத்தின் கீழ் முதலாவதாக ஓய்வு பெறும் பூநகரி காரியாதிகாரி திரு. எஸ். ஸ்ரீநிவாசனுக்கு மாவட்ட காரியாதிகாரிகள் 'பாம் கோர்ட்டில்' பிரிவுபசார விருந்தளித்தனர்.

இவ்வைபவத்துக்கு காரியாதிகாரி திரு. ஜே. எம். சபாரத்தினம் தலைமை வகித்தார். சென்ற இருபது வருட காலமாக திரு. ஸ்ரீநிவாசன் ஆற்றிய தொண்டு பற்றி திரு. சபாரத்தினம் பாராட்டிப்பேசினார்.

காரியாதிகாரிகள் திரு. கே. கணபதிப்பிள்ளையும் திரு. டி. டபிள்யூ. செல்வரத்தினமும் பேசினர்; தமக்களித்த கௌரவத்துக்கு திரு. ஸ்ரீநிவாசன் நன்றி தெரிவித்தார்.

## வர்த்தகவிருத்திக்கு புதிய உப இலாகா

கொழும்பு, வெள்ளி

தேயிலை, ரப்பர், தேங்காய், தெங்கு இற்பத்தியிப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதின்மூலம் ஸ்தாபனத்தின் வேலைகளை விஸ்தரிப்பதற்கு கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா தீர்மானித்திருக்கிறது.

ஏற்றுமதி வர்த்தகத்தை கவனிப்பதற்காகப் புதிய உப-இலாகா ஒன்றை நிறுவியுள்ளார்கள். அடுத்தமாதத்தில் உப-இலாகா வெளிநாட்டு ஏற்றுமதி வேலைகளைக் கவனிக்கும் இந்த உப-இலாகா அரசாங்கம் வியாபார உடன்படிக்கை செய்திருக்கும் நாடுகளுடனும் இலங்கையுடன் பரஸ்பரம் பண்டமாற்றுச் செய்யும் நாடுகளுடனும் முதலில் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபடுமென கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா தலைவர் திரு. தேசப்பிரியா சேனநாயக்கா தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்கு உயர்ந்தரக தேயிலை, ரப்பர், தெங்குப் பொருள்களை ஏற்றுமதிசெய்ய அரசாங்கம் இந்த அதிகாரத்தை கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகாவுக்கு அளித்திருக்கிறது.

பெரும்பாலும் நமதுபொருள்களை வாங்காத சோஷலிஸ்ட் நாடுகளுக்கு உயர்ந்தரக தேயிலை, ரப்பர், தெங்குப் பொருள்களை ஏற்றுமதி செய்வதின்மூலம். அரசாங்கம் இந்த நாடுகளுடன் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்யும் என்று திரு. தேசப்பிரியா சேனநாயக்கா கூறினார்.

பங்களூர், ஜுன் 30

மைசூர் ராஜ்யத்தில் 80 சதவிகித நிலப்பரப்பில் நாளை முதல் பூரண மதுவிலக்கு அமுலுக்கு வருகிறது. இரண்டு ஜில்லாக்களைத் தவிர இதர இடங்களில் மதுவிலக்கு நாளை முதல் அமுலாகும்.

# "பாகிஸ்தான் வெளியேறினல் காஷ்மீர் பற்றி பேசத் தயார்!"

## நிருபர்கள் மகாநாட்டில் நேரு அறிவிப்பு

### குவாய்த், அங்கோலா; சீனவின் அணுகுண்டுபற்றி பிரஸ்தாபம்

புதுடில்லி, ஜூன் 30

"வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்துக்கொண்டுள்ள காஷ்மீர் பகுதியிலிருந்து பாகிஸ்தான் வெளியேறினல்தான் காஷ்மீர் சம்பந்தமாக பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்தியா தயாராக இருக்கும்" என்று பாரதப்பிரதமர் திரு. நேரு இன்று நிருபர்கள் மகாநாட்டில் பேசுகையில் கூறினர்.

"காஷ்மீரின் மூன்றிலொரு பகுதிப் பிரதேசத்தை பாகிஸ்தான் வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்து வைத்துக்கொண்டிருக்கிறது. காஷ்மீரிலிருந்து பாகிஸ்தான் படைகள் வெளியேறவேண்டுமென்று எட்டு வருஷங்களுக்குமுன்னரே ஐ. நா. பாதுகாப்புச்சபை பாகிஸ்தானுக்கு உத்தரவிட்டது. இன்னமும் இதைப் பாகிஸ்தான் செய்யவில்லை. இந் நிலையில் காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்புநடத்தவேண்டுமென்று பாகிஸ்தான் கூறுவது கேவலமானது; வெட்கக்கேடானது" என்று பிரதமர் நேரு கூறினர்.

வாக்கெடுப்பு நடத்தவேண்டுமென்று அங்குபடைகளை வைத்துக்கொண்டு கூறும் பாகிஸ்தான்பாரதத்தின்காஷ்மீருடன் தான் ஆக்கிரமித்து வைத்துள்ள காஷ்மீர் பகுதியை ஒப்பிட்டுப்பார்க்கட்டும் என்று திரு. நேரு கூறினர்.

**படை நடவடிக்கை எடுக்காது**

"ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காஷ்மீர் பகுதிகளை மீட்பதற்கு இந்தியா படை நடவடிக்கை எதுவும் எடுக்காது. ஆனல் அப்பகுதிமீதுள்ள உரிமையை அடிக்கடி வற்புறுத்தி வருவோம்" என்று பிரதமர் நேரு குறிப்பிட்டார்.

"ஜம்மு காஷ்மீரில் சிறுசிறு நாசவேலைகள் நடைபெற்று வருவது பாரதத்துக்கு கவலையைக் கொடுத்துவருகிறது. இந்த நாச நடவடிக்கைகளில் பாகிஸ்தானிலிருந்து வந்தவர்கள்தான் ஈடுபட்டார்களென்பது வெளிப்படை இதை அவர்களே ஒப்புக்கொண்டுள்ளார்கள். அவர்கள் தாமாகவே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பார்களென்று நாம் நம்பவில்லை. இதுபோன்ற நாசநடவடிக்கைகளினல் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்துவிடமுடியாது" என்றும் திரு. நேரு கூறினர்,

**விடுதலையடைந்த பகுதிகள் இணைப்பு**

ஒன்றரை மணி நேரம் பிரதமர் நேரு நிருபர்கள் மகாநாட்டில் பேசினர். உள்நாட்டு வெளிநாட்டு விஷயங்கள்பற்றி நிருபர்கள் கேட்ட பல கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

இந்தியாவில் போர்ச்சுக்கலின் ஆதிக்கத்திலிருந்து தாமாக விடுவித்துக்கொண்ட நாகர்ஹவேலி, பாத்ரா ஆகிய பகுதிகளை இந்திய யூனியனுடன் இணைக்கும் முறையான சட்டம் பார்லிமெண்டின் அடுத்த கூட்டத் தொடரில் கொண்டுவரப்படுமென்று பிரதமர் நேரு தெரிவித்தார்.

**குவாய்த் தனிநாடு**

குவாய்த் ஒரு தனி அரசாகவே பாரதம் கருதிவந்திருக்கிறது என்று கூறிய பிரதமர் நேரு ஒரு நாட்டின் எல்லையோ நிலையோ முன்னர் அப்படி, இப்படி இருந்ததென்று சுட்டிக்காட்டி இக்காலத்தில் உரிமை பாராட்டுவது முறையாகாது என்று கூறினர்.

பெல்கிரேட்டில் நடைபெறவிருக்கும் நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாட்டில் கலந்துகொள்ளத் தாம் பெல்கிரேட் செல்லக்கூடுமென்றும் நேருஜி கூறினர்.

வாஷிங்டனுக்கும் மாஸ்கோவுக்கும் தாம் செல்லவிரும்புவதாகவும் இதுபற்றிய திட்டம் செப்டம்பர் இறுதியில் அல்லது அக்டோபர் ஆரம்பத்தில்தான் உருவாகக்கூடுமென்றும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் பிரதமர் தெரிவித்தார்.

**சீனவின் அணுகுண்டு**

சீன அணுகுண்டு தயாரிப்பதாக வெளிவந்த செய்திபற்றி நிருபர் ஒருவர் கேட்ட கேள்வியொன்றுக்கு திரு. நேரு பதிலளிக்கையில் சீன அணுகுண்டு தயாரித்து வருவதாக சீனவோ அல்லது வேறெந்த ஸ்தாபனமோ தமக்கு அறிவிக்கவில்லையென்றும் அணுகுண்டு தயாரிக்கும் முயற்சியில் சீன ஈடுபட்டிருக்கக்கூடுமென்றும் கூறினர்.

**அங்கோலா நிலைமை**

அங்கோலா நிலைமை பற்றிய ஒருகேள்விக்கு திரு.நேரு பதில் அளிக்கையில் பின்வருமாறு கூறினர்.

உலகில் பயங்கரமான சம்பவங்கள் அங்கோலாவில்தான் நடைபெறுகின்றன. இப்படியும் நடந்து கொள்ள முடியுமா? என்று வியக்கத்தக்க முறையில் கொடூரமாகப் போர்ச்சுக்கீஸியர் அங்கோலாவில் நடந்துகொள்கின்றனர். பேர்ச்சுக்கல் மீது செயல் நடவடிக்கைகளை ஐ. நா. மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலை விரைவில் ஏற்பட்டுவிடும்.

பிரிட்டன், போர்ச்சுக்கலுக்குப் படை உதவி அளிப்பது பற்றிய கேள்விக்குப் பதில் அளிக்கையில், போர்ச்சுக்கலுக்கு பிரிட்டன் ஆயுத உதவி அளிப்பது ஆழ்ந்த கவலையைத் தருகிறது என்ருர்.

பேர்ச்சுக்கலை எந்தக் கூட்டு ஸ்தாபனத்திலும் அங்கத்துவ நாடாக வைத்துக்கொண்டிருப்பதால் அந்தக்கூட்டு ஸ்தாபனத்துக்குத்தான் கௌரவக் குறைவென்றும் போர்ச்சுக்கலுக்கும் பிரிட்டனுக்கும் 600 ஆண்டுகளுக்கும் அதிகமான நட்பு இருப்பதாகக் கூறிக்கொள்கிருர்கள். இந்த நட்பினல் எப்பொழுதாவது கௌரவம் உயர்ந்ததாகச் சொல்லமுடியது என்று திரு. நேரு கூறினர்.

போர்ச்சுக்கீஸியர் அங்கோலாவில் நடந்துகொள்வது சரியானதென்று சிலர் கூறுவது தான் விந்தையாக இருக்கிறதென்று திரு. நேரு தெரிவித்தார்.

---

# "தென்னுபிரிக்கா வெளியேற வேண்டும்"

### சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனம் தீர்மானம்

ஜெனிவா, ஜூன் 30

சர்வதேச தொழில்நல ஸ்தாபனத்திலிருந்து தென்னுபிரிக்கா வெளியேற வேண்டுமென்று ஜெனிவாவில் நடைபெற்றுவரும் சர்வாதச தொழில்நல ஸ்தாபனத்தின் மகாநாட்டில் நைஜீரியப் பிரதிநிதி கொண்டுவந்த தீர்மானம் நேற்று நிறைவேறியது.

தென்னுபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கை சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் முற்றிலும் முரணனவையென்றும் தென்னுபிரிக்காவில் தொழிலாளர்களுக்கு உரிமையளிக்கப்படவில்லையென்றும் நைஜீரியப் பிரதிநிதி மகாநாட்டில் கூறினர்.

இத்தீர்மானத்தின்மீதுபிரிட்டிஷ் பிரதிநிதி பேசுகையில் தென்னுபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையைத் தாம் கண்டிப்பதாகவும் ஆனல் ஸ்தாபனத்திலிருந்து தென்னுபிரிக்காவை வெளியேற்றுவதால் எவ்வித நன்மையும் கிடைத்துவிடாதென்றும் கூறினர்.

தென்னுபிரிக்கா தொழிலாளர் நல ஸ்தாபனத்திலிருந்து வெளியேறவேண்டுமென்ற தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது தீர்மானத்தை ஆதரித்து 161 வாக்குகள் கிடைத்தன. 89 பேர் வாக்களிப்பில்கலந்துகொள்ளவில்லை.

---

# பாகிஸ்தான் ஜனதிபதி

### 7ந் திகதி வாஷிங்டன் புறப்படுவார்

கராச்சி, ஜூன் 30

பாகிஸ்தான் ஜனதிபதி பீல்ட் மார்ஷல் அயூப்கான் அடுத்தமாதம் 7ந் திகதி கராச்சியிலிருந்து வாஷிங்டனுக்குப் பிரயாணமாவார். வாஷிங்டன் செல்லும் வழியில் லண்டனில் இரண்டு தினங்கள் தங்கி பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மிலனைச் சந்தித்துப் பேசுவார்.

வாஷிங்டனில் அமெரிக்க காங்கிரஸின் இரு சபைகளின் கலப்புக் கூட்டத்தில் அயூப்சான் பேசுவார். அமெரிக்க ஜனதிபதி கென்னடி, ராஜாங்க மந்திரி டீன் ரஸ்க் ஆகியோர் அளிக்கும் விருந்துபசாரங்களிலும் அவர் கலந்துகொள்வார். திரு. கென்னடி, திரு. றஸ்க் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியபின் ஜனதிபதி அயூப் 14ந் திகதி நியூயார்க் நகருக்குப் பிரயாணமாவார். 15த் திகதி நியூயார்க்கிலிருந்து டெக்ஸாஸ் மாகாணத்துக்குச் சென்று உப ஜனதிபதி திரு. லின்டன் ஜோன்சனைச் சந்திப்பார். 17ந் திகதி மீண்டும் நியூயார்க் வந்து தங்கியபின் கராச்சிக்குப் புறப்படுவார். வழியில் ஜெனிவாவுக்குச் சென்று தங்கியபின் ஜூலை மாதம் 23ந் திகதி கராச்சி வந்துசேர்வார்.

---

### மாந்தீவு ஆஸ்பத்திரி உணவில் அதிருப்தி

மட்டக்களப்பு, வியாழன்

மாந்தீவிலுள்ள குஷ்ட நோயாளருக்கு நல்ல உணவு கொடுக்கப்படுவதில்லையென்ற புகார் சில காலமாக இங்கு நிலவி வருகிறது. இக்குறையைச் சரிவரத் தீர்த்து வைக்காமையால் நோயாளர் ஒரு நாள் உணவு உண்ண மறுத்துவிட்டனர். இதுபற்றி சுகாதார மந்திரிக்கும், சுகாதாரப்பகுதித் தலைவருக்கும் தந்திகள் அனுப்பப்பட்டன.

இது சம்பந்தமாக பதில் சுகாதார சுப்பிரிண்டன்ட் டாக்டர் பாலச்சந்திரன் மாந்தீவுக்கு விஜயஞ்செய்து அளித்த வாக்குறுதியின் பேரில் நோயாளர் உண்ணவிரதத்தைக் கைவிட்டனர்.

---

# குவாய்த்-அரேபிய படைகள் உதவிக்குச் சென்றன

## பிரிட்டிஷ் போர்க் கப்பல்கள் விரைகின்றன

லண்டன், ஜூன் 30

குவாய்த் ராஜ்யத்துக்கும் ஈராக்கிற்கும் இடையிலுள்ள போக்குவரத்துப் பாதைகளை குவாய்த் அரசாங்கம் மூடிவிட்டது.

குவாய்த்-ஈராக் எல்லைகளில் சாவூதி அரேபியாத் துருப்புக்கள் ரோந்து புரிகின்றன. இன்று ஜோர்டான் துருப்புக்கள் குவாய்த் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

குவாய்த் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களைக் காவல் புரிவதற்காகப் பிரிட்டிஷ் துருப்புக்கள் குவாய்த் நாட்டை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன.

குவாய்த் நாட்டுக்கு அபடான் துறைமுகத்திலிருந்து உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த ஈரானிய இயந்திரப் படகுகள் இரண்டின் மீது ஈராக் துருப்புக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைத் தொடர்ந்து அங்கு நிலைமை மோசமாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

குவாய்த் ராஜ்யம் ஈராக்கிற்குரியது என்று ஈராக் பிரதமர் ஜெனரல் காசிம் உரிமை பாராட்டியதைத் தொடர்ந்து குவாய்த் ராஜ்யத்தின் மீது ஆக்கிரமிப்பு நடைபெற்ருலும் எவரும் தாக்குதல் நடத்த முயற்சி செய்தாலும் அது சாவூதி அரேபியாமீது நடத்தியதாகவே சாவூதி அரேபியா கருதும் என்று சாவூதி அரேபிய மன்னர் முன்னரே ஈராக்கை எச்சரித்திருந்தார்.

குவாய்த் நெருக்கடி சம்பந்தமாக பரிட்டிஷ் கடற்படை அலுவல்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் பிரிட்டிஷ் கடற்படை விமானந் தாங்கிக் கப்பலொன்றும் மற்றும் கடற்படைக் கப்பல்கள் சிலவும் பாரசீகக் கடலை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

**கைகலப்பில் பலர் காயம்**

குவாய்த் சந்தையில் ஈராக் வியாபாரிகளுக்கும் குவாய்த் வியாபாரிகளுக்குமிடையில் நேற்று ஒரு கைகலப்பு ஏற்பட்டதாகவும் இதில் பலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்துக்கெதிரான நாச வேலைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி குவாய்த்தில் ஈராக்கியர்கள் பலரைக் குவாய்த் பாதுகாப்பு பொலிசார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

---

### காங்கோ சுதந்திரதினம்

லியப்போல்ட்வில்லி, ஜூன் 30

காங்கோ சுதந்திரமடைந்த முதலாவது வருடாந்த விழாவை இன்று காங்கோ மக்கள் கொண்டாடுகிருர்கள்.

கடாங்கா ஜனதிபதி திரு. ஷோம்பே நேற்று மீண்டும் எலிஸபெத்வில்லியில் விடுத்த ஒரு அறிக்கையில் காங்கோ பார்லிமெண்ட் மீண்டும் கூட வேண்டுமென்ற யோசனையை தாம் எதிர்க்கவில்லையென்றும் ஆனல் பார்லிமெண்ட் கூடுவதற்குமுன் காங்கோலிய தலைவர்கள் சந்தித்துப்பேச வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

---

# அஸ்ஸாம் மொழிப்பிரச்னைக்கு சாஸ்திரியின் திட்டம்

## சரியான அடிப்படை என்கிருர் சட்ட மந்திரி

கல்கத்தா, ஜூன் 30

அஸ்ஸாம் ராஜ்ய மொழிப் பிரச்சினைக்கு திரு. லால் பகதூர் சாஸ்திரியின் திட்டத்தின் அடிப்படையிலேயே தீர்வு காணமுடியும் என்று இந்திய மத்திய அரசாங்க சட்டமந்திரி திரு. ஏ. கே. சென் நேற்றுத் தெரிவித்தார்.

"அஸ்ஸாம் இந்தியாவின் ஒரு எல்லை ராஜ்யம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அங்கு பந்தோபஸ்து நடவடிக்கைகள் ஒழுங்காக இருக்க வேண்டும். வெறுப்பும் வேற்றுமையும் அங்கு நிலவ அனுமதிக்கக்கூடாது. எனவே அஸ்ஸாம் மொழிப் பிரச்சினையை எப்படியாவது விரைவில் தீர்க்கவேண்டியது அவசியம்" என்று திரு. சென் கூறினர்.

அஸ்ஸாம் ராஜ்யத்தின் ஐந்து மலை ஜில்லாக்களுக்கு ஸ்காட்லாந்து முறையில் நிர்வாக உரிமை அளிப்பதென்ற பிரதமர் நேருவின் யோசனைபற்றி ஆராய்வதற்காக மலை ராஜ்யத தலைவர்களின் மகாநாடொன்று இன்று நடைபெறுகிறது.

### மணிவாக்கு

ஞானியும், விஞ்ஞானியும் இரு துருவங்கள். ஞானி ஆத்மீக உண்மைகளை வெளியிடுகிறார். விஞ்ஞானி பரமார்த்தீக உண்மைகளை எடுத்துக்காட்டுகிறார்.

—ஒரு அறிஞர்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
ஆனி மீ 17௨ (1-7-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## இ. போ. ச.

இன்று முதல் இ. போ. ச. எனப்படும் இலங்கை போக்குவரத்து சபையின் நிர்வாகத்தை 17 பிராந்தியங்களாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு நிர்வாக அதிகாரியின் கீழ் இயங்க ஒழுங்கு செய்திருப்பதாகத் தெரிகிறது. விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டிருந்தும், அதன் யோசனைகளுக்காகக் காத்திராமல் இப்புதிய ஏற்பாட்டை அவசரமாகச் செய்திருப்பதிலிருந்து, இவ்விஷயத்தில் கருத்து வேற்றுமை எதுவுமில்லை என்பது தெளிவு. நிர்வாகம் திறமையாக நடைபெறுவதற்கு, அதிகாரத்தை தலைமைக் குழு தன் கையில் வைத்திராமல் பலரிடமும் பகிர்ந்தளிப்பதே மேல் என்ற மேலான கொள்கையை இதன் மூலம் அரசாங்கமும் ஒப்புக் கொண்டுள்ளது.

பஸ் சேவை தனிப்பட்டவர் கைகளில் இருந்தபோது நல்ல இலாபத்தில் நடந்து வந்திருக்கையில், அரசாங்கம் அதை ஏற்றதும் பெரும் நஷ்டத்தில் நடப்பதுடன் பொது மக்களுக்கும வசதிக் குறைவுகள் அதிகமாகியுள்ளன. கொழும்பிலிருந்து ஒரு தலைமைக் குழு இலங்கை எங்கும் திறமையாக பஸ் சேவையை நடத்துவதென்பது சுலபமல்ல. 17 பிராந்தியங்களாகப் பிரித்தபின் ஆங்காங்கேயுள்ள நிர்வாக அதிகாரிகள் பொறுப்பும் அதிகாரமும் பெற்று, அதிக திறமையாக நடத்த முடியும். பொது மக்களும் இனி பிராந்திய அதிகாரிகளுக்கு அதாவது பக்கத்திலேயுள்ளவர்களிடமே நேரிலோ, கடித மூலமோ புகார் செய்யலாமாதலால், இனி அப்புகார்கள் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு, சேவை மேம்படவும் அதிக வாய்ப்புண்டு. இதற்கிடையே, விசாரணைக் கமிஷன், பஸ் சேவை நஷ்டத்தில் நடக்கும் காரணங்களை விசாரித்து தக்க யோசனைகளைக் கூறினால் இ. போ. ச. நிர்வாகம் திறம்பட இலாபகரமாக நடக்க வழி பிறக்கலாம்.

## வாலிபர் தற்கொலை

யாழ்ப்பாணத்திலேவிவாகம் செய்யக் கூடிய காலைப் பருவத்தில் இருந்த ஒரு வாலிப சாரதி, தான் ஓட்டிய லொறிச் சக்கரத்திலேயே தன் தலையைக்கொடுத்துதற்கொலை செய்து கொண்ட பரிதாப விவரங்களைப் படித்தவர்களுக்கு ஒரு நல்ல பாடம் தெரியவரும்.

குறித்த வாலிபரின் தகப்பனார் குடிகாரரென்றும் குடும்பத்தைப்பற்றிக் கவலைப்பட்டதில்லை என்றும் வாலிபரின் தாய் வாக்குமூலமளித்தார். ஆதலால் தகப்பனிருந்தும் குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பும் கவலையும் மூத்த புதல்வரான அவ்வாலிபர் தலையில் சுமந்தது. தன் விவாகம், தம்பியின் வேலை, குடும்பச் செலவு எல்லாப் பிரச்சினைகளும் அவ்வாலிபரின் தலையில்தான். தவறிய தம்பியை அடித்துக் கண்டிக்கவே தாய் கடிந்தார். இந்நிலையில் மனமிடிந்து அந்த வாலிபர் வாழ்க்கையிலே வெறுப்புற்று தன் லொறியிலேயே தற்கொலை செய்து கொண்டுவிட்டார்.

குடும்பத் தலைவனை தகப்பனுக்கு குடிப்பழக்கம் இல்லாதிருந்திருப்பின், அந்த அழகான குடும்பம் இப்படிச் சீர்குலைந்திருக்கத் தேவையில்லை. மனைவியின் நிலையோ மிகப் பரிதாபமானது. மனைவி, குழந்தைகள், குடும்பம் இவற்றை விட குடி அதிக முக்கியமா? இந்தப் பரிதாப சம்பவம், குடிப் பழக்கமுள்ள பல குடும்பத் தலைவர்களுக்கும் நல்லதோர் எச்சரிக்கையாக இருந்து அவர்களைத் திருத்த ஓரளவாவது பயன்படவேண்டும். மேற்குறித்த குடும்பத்துக்கு நேர்ந்த கதியை, மற்ற குடிகாரரும் சற்றே கவனித்து சிந்தனை செய்தால், தங்கள் கூடாத பழக்கத்தை உடன் கைவிடவும், குழந்தைகளும் மனைவிமார்களும் வேதனை நீங்கி அவர்களது குடும்பங்களும் சிறப்புற்றோங்கவும் கூடும்.

## விஸாவரி

ஸ்தலஸ்தாபன சேவையிலுள்ள நகரசுத்தித் தொழிலாளர் விஸாவரி கட்டத் தேவையில்லை என்று அரசாங்கம் தீர்மானித்து, அக்கட்டணங்களை வாபஸ் பெறுமென்று ஒரு செய்தி கூறுகிறது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கமும் அவ்வெளிய தொழிலாளர் சார்பாக எடுத்த முயற்சி வெற்றி பெற்றது பாராட்டத்தக்கதாகும்.

விஸாவரி கட்டளை பிறப்பிக்கப்பட்ட மற்றவர்களில் பெரும்பான்மையோரும் குறைந்த சம்பளம் வாங்கும் எளிய மக்களே. அவர்கள் இங்கு உழைத்து வாயையும் வயிற்றையும் கட்டி, ஊரிலுள்ள குடும்பக் காலட்சேபத்துக்குப் பணம் அனுப்ப வேண்டியவர்கள். இவர்கள் பணமனுப்பாவிடில் அங்கு வீட்டிலே அநேகமாகப் பட்டினிதான். அங்கு அரை வயிற்றுக் கஞ்சிக்காவது வழியிருந்தால், இவ்வளவு சங்கடப்பட்டுக் கொண்டு அம்மக்கள் குடும்பத்தை விட்டுப் பிரிந்து இங்கு இரார்.

அவர்களில் பெரும்பாலோரும் பல வருடங்களாக இங்கு சம்பளச் சிப்பந்திகளாக இருந்து வருபவர்கள். பெருந்தொகையைத் திடீரென்று விஸாவரியாக விதித்துள்ளதால், அவர்களும் இலங்கையை விட்டுக் கட்டாயமாகச் சென்று, அங்கு ஜீவனத்துக்கு வழியில்லாது சங்கடப்பட வேண்டி நேரிடும்.

இதே சமயத்தில், விஸா எடுக்காமல், பாஸ்போர்ட் மட்டும் எடுத்து இங்கு இருந்து வரும் இந்தியரையும் வரிகட்ட வேண்டுமென்று நிர்ப்பந்திக்க குடியேற்ற இலாகா உத்தேசித்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. இதைத் தவிர "நாடற்றவர்களாக" வாழ்பவர்களுக்கும் இனி என்னென்ன கெடுபிடிகள் ஏற்படுமோ? கண்டபடி சட்டங்கள் போட அதிகாரங்களும் உரிமையும் அரசாங்கத்துக்கு இருக்கலாம். ஆனால் இவையெல்லாம் மனிதரைப் பற்றிய பிரச்சினைகள். காலஞ் சென்ற பிரதமர் கூறியபடி மனிதாபிமானத்துடன் தீர்க்கப்பட வேண்டியவை. சம்பந்தப்பட்ட எளிய மக்களுக்கு கூடுமானவரை சங்கடமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது, இரு அரசாங்கங்களின் மேலான கடமையும் பொறுப்புமாகும்.

# மகிழ்ச்சி நிறைந்த மாலதீவு
## மக்களின் தொழிலும் வாழ்க்கையும்

**இலங்கைக்கும் மாலதீவுக்கும் பல நூற்றாண்டுகளாகத் தொடர்பு இருந்து வருகின்றது. அத் தீவைப் பற்றியும் அங்கு வாழும் மக்களைப் பற்றியும் திரு. ஜே. பி. அம்பலவாணர் இக்கட்டுரையில் சுவையாக எழுதியிருக்கின்றார். 'மோர்ணிங் ஸ்டார்' பத்திரிகையில் வெளியான ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம் இது.**

இலங்கை மக்களாகிய நாம் மாலதீவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். நாம் இதுவரையில் மாலதீவைப்பற்றி தெரிந்து கொண்டிருப்பதெல்லாம், குழந்தைகள் தேவைகளைப்பற்றி கர்ணபரம்பரையாக வந்தகட்டுக்கதைகளைச்சிறுவயதில் தெரிந்து கொண்டதிற்குச் சமமாகும். நான் முதலில் மாலதீவைப்பற்றிக் கொண்டிருந்த அபிப்பிராயம்உண்மைக்குமாறுபட்டதும் முற்றிலும் தவறுதலுமாகும். இதை இங்கு வந்த பின்னர் தான் தெரிந்துகொண்டேன். பல வழிகளால் இலங்கைக்கும் மாலதீவுக்கும் நூற்றாண்டுகளாகத் தொடர்பு இருந்து வந்திருக்கிறது. ஆனால் இலங்கையர் மாலதீவைப் பற்றி மிகக் குறைவாகத்தான் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இதன் உண்மையை உணரும் பொழுது மிகவும் ஆச்சரியமாகவும் துயரமாகவும் இருக்கிறது.

சுமார் 417மைல்தூரத்துக்கப்பால்இலங்கைக்குத் தென்மேற்கில்மாலதீவு இருக்கிறது. கட்டுநாயக்காவிலிருந்து ஆகாய மார்க்கமாக இத்தீவை அடைய மூன்று மணித்தியாலங்களுக்குக் குறைவாகப் பிடிக்கும். ஆனால், நீராவிக் கப்பல் மூலம் இலங்கையிலிருந்து மாலதீவுக்கு நாற்பத்தெட்டு மணி நேரத்தில் போய்ச் சேரலாம். எங்களைக் கட்டுநாயக்காவிலிருந்து ஏற்றிச்சென்ற விமானம் ஹுலுகல் தீவில் இறங்கியது. இங்கிருந்து மாலதீவுக்கு, பதினைந்து நிமிஷங்களில், நீராவிப் படகில் போய்ச் சேர்ந்தோம். இங்குள்ள தீவுகளில் மாலதீவு முக்கியமானதொன்று. இதை ஒருபெரியதீவு என்று சொல்ல முடியாது. இங்கிருந்துதான் இராச்சிய பரிபாலனம் நடைபெறுகிறது. சுல்தானும் இங்குதான் வசிக்கிறார். இங்குள்ள பிரதான வீதிகளையும் குறுக்கு வீதிகளையும் சுத்தமாக வைத்திருக்கும் முறை என்னை மிகவும் கவர்ந்தது. முருகைக் கற்கள் நிறைந்த பல தீவுகளைக் கொண்ட மாலதீவைப் பதினேழு பிரிவுகளாக வகுத்திருக்கிறார்கள். மாலதீவு, இந்து சமுத்திரத்தில் வடக்குத் தெற்காக 470 மைலும் கிழக்கு மேற்காக 70 மைலும் கொண்ட விஸ்தீரணமுடையது. உதாரணமாக, இப்பொழுது ஆர். ஏ. எப். விமானத்தளம் வைத்திருக்கும் ஹான் தீவு மாலதீவிலிருந்து 400 மைல் தூரத்திலிருக்கின்றது. இங்கு 2000 க்கு அதிகமான தீவுகள் இருக்கின்றன. 215 தீவுகளில்தான் மக்கள் வசிக்கிறார்கள்.

### இஸ்லாமிய பிரதேசம்

மாலதீவில், இலங்கையர்கள் நேரடியாகக் குடியேறியிருக்க வேண்டும் அல்லது ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் கிறிஸ்துவுக்கு முந்திய காலத்தில் குடியேறியிருக்கலாம். சிங்களவர்கள் குடியேறியிருந்திருந்தால், அவர்கள் கிறிஸ்தசகாப்தத்திற்கு முன்பே இருந்திருக்கவேண்டும். தென்பகுதியிலுள்ள தீவுகளில் காணப்படும் பாழடைந்த பௌத்த ஆச்சிரமங்களைக் கொண்டு, மாலதீவு மக்கள் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பே பௌத்தமத சால்புடையவர்களாக இருந்திருக்கிறார்களென்று அத்தாட்சிப்படுத்தக் கூடியதாக இருக்கிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டு முடிவதற்கு முன்பே மாலதீவு மக்கள் இஸ்லாம் மதத்திற்கு மாற்றப்பட்டனர். அப்படியாக இப்

(5ம் பக்கம் பார்க்க)

இரத்தினக் கம்பளம்

# கேலிக் கூத்து

பதுமன்

பல்கலைக் கழகத்துக்குப் புதிதாகச் சேரும் மாணவர்களை அங்குள்ள பழைய மாணவர்கள் கேலிசெய்வார்கள். அவர்களை இழித்துரைத்து வேடிக்கையும் பார்ப்பார்கள். புதிய மாணவர்களுக்கு இதிலிருந்து தப்பிக் கொள்வது பரமசங்கடமாகிவிடும். "இதற்காகவா பல்கலைக்கழகத்துக்கு வந்தோம்!" என அவர்கள் எண்ணி எண்ணி வருந்துவார்கள். இப்படிப் புதிய மாணவர்களைக் கேலி செய்வது பல்கலைக்கழகங்களில் ஒரு சம்பிரதாயமாகி விட்டது.

மாணவர்கள் இப்படித் தமாஷாக நடந்துகொள்வதற்கும் ஒரு எல்லை இருக்கவேண்டுமெனப் பல்கலைக்கழக அதிகாரிகள் பல்வேறு சந்தர்ப்பங்களிற் கூறியிருக்கின்றனர். ஆனால் எவரும் அதனைப் பொருட்படுத்துவதாயில்லை.

சமீபத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்துப் புதிய மாணவர்கள் கைகளைப் பிணைத்துக் கொண்டு கலகாவீதி வழியாகச் சென்ற காட்சி அருவருப்பாக இருந்ததென அன்பர் ஒருவர் கவலைப்பட்டு எழுதியிருக்கின்றார்.

### துணைவேந்தர் உபதேசம்

இப்படி எல்லாம் எழுதும் போது பல்கலைக்கழகத் துணைவேந்தர் சேர் நிக்கலஸ் அட்டிகல புதிய மாணவர்களுக்குக் கூறியுள்ள அறிவுரை நினைவுக்கு வருகின்றது. நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கி அதனைச் சகல விதங்களிலும் சிறப்படையச் செய்வதற்குப் பல்கலைக்கழகங்கள் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றன. மாணவர்கள் தமது பொறுப்பை உணர்ந்து தமது கடமைகளை நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டுமென அவர் பல்கலைக்கழகத்துப் புதிய மாணவர்களுக்குக் கூறியிருந்தார்.

### நல்லவர்களாக ........

இலங்கைப் பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர் விடுதிகள் சகல வசதிகளுடனும் அமைந்திருப்பதை அவர் நினைவூட்டி அவற்றுக்கு எவ்வித சேதமும் விளையாது பார்த்துக்கொள்ள வேண்டுமெனவும் அவர் மாணவர்களைக் கேட்டுக்கொண்டார். இவ்வளவுடன் அவர் நின்றபாடில்லை. பல்கலைக்கழகத்தில்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

சீதனம் கேட்கும் வழக்கத்தை விட்டுவிட்டு, வேலை செய்யும் பெண்களையே மணம் புரிய வேண்டுமென்று உடுப்பிட்டி மெம்பர் ஒரு யோசனை கூறுகிறார்.

என் நண்பர் ஒருவர், அரசாங்கத்தில் பெரிய உத்தியோகம் வகிக்கும் ஒரு பெண்மணியை மணம் புரிந்தார். இவருக்கும் வேலை அவருக்கும் வேலை. இருவரும் தங்கள் தங்கள் வேலைக்குப் போய்விடுவதாயும், குழந்தையை தாதியிடம் விட்டுவிட்டுப் போவதாயும், 3 வேலைக்காரர்களே வீட்டை நடத்துவதாயும், தம் மனைவி வேலை செய்வது தமக்குப் பிடிக்கவில்லை என்றும், அவர் தெரிவித்தார்.

∴ ∴ ∴

மற்றோர் தாய். நன்கு படித்துப் பட்டம் பெற்றிருக்கிறாள். மூன்று குழந்தைகள். வீட்டில் வேலைக்காரர் யாருமில்லை. காலை 5 மணிக்கு எழுந்தால், இரவு 10 மணி வரை வேலை சரியாக இருக்கும். குடும்ப வேலைகளைச் செய்வதே தமக்கு மிகவும் சந்தோஷமாயிருப்பதாயும், வெளியில் சம்பளத்துக்கு வேலை செய்துவிட்டு, வீட்டு வேலைகளை வேலைக்காரரிடம் ஒப்படைக்கத்தான் விரும்பவில்லை என்றும் தெரிவிக்கிறார்.

∴ ∴ ∴

வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்துகொண்டு போகிறது. புருஷன் மட்டும் சம்பாதிப்பது போதவில்லை. மனைவியும் வேலைக்குச்சென்று சம்பாதித்தால் தான் குடும்பம் ஓடுவதாகவுள்ளது. ஆகவே துணைவியும் இஷ்டத்துக்கு மாறாக வேலைக்குப் போகவேண்டியிருக்கிறதென்றார் ஒருஅன்பர்.

∴ ∴ ∴

ஒரு பெண்மணி சம்பளத்துக்கு வேலைபார்த்துவந்தார். கல்யாணமானதும் வேலையை விட்டார். ஆனால் சில மாதங்களில் புருஷனுக்கு வேலை போய்விட்டது. பல மாதங்களாக வேலை கிடைக்கவில்லை. மனைவிக்கு பழைய வேலை கிடைத்தது. அவரது சம்பளத்தில் குடும்பம் சில மாதம் ஓடியது. புருஷனுக்கு வேலை கிடைத்ததும், மனைவி மீண்டும் வேலையை விட்டுவிட்டார்.

மனைவிக்கு கல்வியும், கைத்தொழிலும் தெரிந்திருப்பது மிகவும் நல்லது. ஒரு நெருக்கடியில் குடும்பத்தை சமாளிக்க தைரியமும் வாய்ப்புமிருக்கும்.

ஆனால், பெண்ணே பொழுதை பொன்னாக்க வேண்டியது தான். ஆனால் ஆண்களே வேலையில்லாமல் கஷ்டப்படுகையில், பெண்களும் வேலைக்குப் போட்டிபோடுவது கூடாதென்று, ஒரு படித்த பெண்மணியே சமீபத்தில் தெரிவித்தார். அவர் ஒரு பீ. ஏ. பட்டதாரி. ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால் அவரே ஒரு வேலைக்கு மனுச் செய்திருந்தார்!

இந்தப் பிரச்சினையெல்லாம் இரண்டுங்கெட்டானைநடுத்தர குடும்பங்களுக்குத்தான். எளிய குடும்பங்களில், ஆண், பெண் மட்டுமன்றி, குழந்தைகளும் வேலை செய்தால்தான் குடும்பம் ஓடுவதாகவுள்ளது. அவர்களுக்கு சீதனம் முதலிய பிரச்சினைகளும் கிடையாது.

# கப்பல் கட்டண உயர்வு பற்றி வர்த்தகர் எச்சரிக்கை

## "உணவுப் பொருட்களின் விலை ஏறிவிடும்"

கொழும்பு, வெள்ளி

அக்டோபர் முதலாம் திகதி கப்பல் கட்டண உயர்வு அமுலுக்கு வருமானல் உணவுப் பொருட்கள், மிஷினரிகள், கட்டடச் சாமான்கள் ஆகியவற்றின் விலையில் உயர்வு ஏற்படுமென கொழும்பிலுள்ள வர்த்தகர்கள் எச்சரித்துள்ளனர். துணியின் விலைமட்டுமே அதிகரிக்காதென்றும், இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பொருட்களின் விலை ஏற்றத்தினல் பாவனையாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## இன்று கொழும்பு திட்டத்தின் 10 வது ஆண்டு நிறைவு

கொழும்பு, வெள்ளி

நகர கொழும்புத் திட்டத்தின் 10 வது ஆண்டு நிறைவாகும். இது சம்பந்தமாக நீதிமந்திரி திரு. ஸாம் பி. ஸி. பெர்னண்டோ புகைப்படக் காட்சி ஒன்றைத்திறந்து வைப்பார். கலாபவன வளவில் கொழும்புத் திட்டம் சம்பந்தமான திரைப்படங்களும் காட்டப்படும். நிதிமந்திரி திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா கொழும்புத் திட்டம் பற்றி ஒரு செய்தியை விடுத்திருக்கிருர்.

## 2 மாணவர்களுக்கு கி. நைஜீரியா உபகாரச் சம்பளம்

கொழும்பு, வெள்ளி

குண்டசாலையைச் சேர்ந்த இரு விவசாய மாணவர்களுக்கு கிழக்கு நைஜீரியாவில் விவசாயக் கல்விபயில இரு உபகாரச் சம்பளங்களை இங்கு விஜயம் செய்திருக்கும் கிழக்கு நைஜீரிய பிரதமர் டாக்டர் மைக்கேல் ஒக்பாரா கூறினர்.

## ஜப்பான் மலை சரிவில் 80 பேர் மரணம்

டோக்கியோ, ஜூன் 30

மத்திய ஜப்பானில் 1 மைல் உயரமான மலை ஒன்று சரிந்து வீழ்ந்ததில் 80 பேர் கொல்லப்பட்டனர். அதன் அடிவாரத்திலிருந்த கிராமத்தின் ஒரு பகுதி முற்ருக நாசமாகியது.

# மகிழ்ச்சி நிறைந்த

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது மாலதீவு இஸ்லாமியப் பிரதேசமாக இருக்கிறது. இங்கு இப்பொழுது வேறு மதங்கள் கிடையாது. இங்கு வெள்ளிக்கிழமை விடுமுறை நாளாகவும், ஞாயிற்றுக்கிழமை வேலைநாளாகவும் இருந்து வருகிறது.

மாலதீவு மக்களின் மொழியில் சிங்கள, அராபிய, ஹிந்துஸ்தானிச் சொற்கள் கலந்திருக்கின்றன. வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்தை நோக்கி எழுதப்படும் மாலதீவு மொழியிலுள்ள எழுத்துக்கள் அராபிய பாரசீக எழுத்துக்களின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இங்குள்ளவர்களின் முக்கியமான தொழில் மீன் பிடித்தலே. கறி சமைப்பதையும் மீன்களுக்குப் புகைப்போடுவதையும் பெண்களே செய்து வருகிருர்கள். இலங்கையில் பிரபல்ய மடைந்துள்ள 'மாசி' யைத் தயாரிப்பதில், பெண்கள் கஷ்டப்பட்டு அதிக நேரம் உழைக்கிருர்கள்.

### கைத்தொழில்

வேளாண்மை, கள்ளிறக்குதல், தச்சுவேலை, கொப்பரா தயாரித்தல், கயிறு பின்னுதல் ஆகிய தொழில்களையும், மாலதீவு மக்கள் செய்து வருகிருர்கள். தென்னை மரங்கள் எல்லாத் தீவுகளிலும் நன்ருக வளர்கின்றன. மரங்கள் அதிகம் உயரமாக வளர்வதில்லை. ஆனல் தேங்காய், இலங்கைத் தேங்காய்களிலும் அளவில் பெரிது. பொன், வெள்ளி நூல்களால் சித்திரத்தையல் வேலை செய்வதில் பெண்கள் கைதேர்ந்தவர்கள். பாயிழைத்தல் மற்ருெரு தொழிலாகும். இங்கு இழைக்கப்படும் பாய்களுக்கு ஒரு தனிமதிப்பு உண்டு. நாணற்புல்லினல் சிறந்த வேலைப்பாடமைந்த பாய்களை இழைக்கிருர்கள்.

* * *

ஆண்கள் சாரத்தையும் சேட்டையும் தேசிய உடையாக அணிகின்றனர். நிறையச் சுருக்கு வைத்த பாவாடையையும், வட்டமான கழுத்துப்பட்டியையும், நீளக்கைகளையும் கொண்ட நீள அங்கியைப் பெண்கள் அணிகின்றனர். ஒரு சிறு துணியால் முக்காடும் இடுகின்றனர்.

### கல்வி

மிகச் சமீபகாலம்வரை, மாலதீவு மக்கள் தாய் மொழியில் கல்வி கற்று வந்தார்கள். தொண்ணூறு சத விகிதத்தினருக்கு எழுதப்படிக்கத் தெரியும். இப்பொழுது அவர்கள் ஆங்கிலத்தைப் போதனமொழியாகக் கொண்டிருப்பதினல், இலங்கையிலிருந்து ஆசிரியர்களை வரவழைத்திருக்கிருர்கள். எங்களில் பன்னிரண்டு பேர் இங்கிருக்கிருேம். அமீனியா பெண்கள் பாடசாலையில் நான் ஆசிரியராகக் கடமையாற்றுகிறேன். கொழும்பு பெண்களைப் போல், இங்குள்ள மாணவிகள் சுறுசுறுப்பாகவும், முன்னேற்றமாகவும் இருக்கிருர்கள். சில ஆண்களும் பெண்களும் கொழும்பு பள்ளிக்கூடங்களில் கல்வி கற்றிருக்கிருர்கள்.

### சுல்தான் தலைமை

இங்கு அரசியலமைப்பு விதிகளுக்கேற்ப அமைந்த அரசாங்கம் இருக்கிறது. மாட்சிமைதங்கிய சுல்தான்தான் அரசாங்கத்தின் தலைவர். முடியாட்சியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றன. சுல்தான் பிரத்தியேகமான சம்பிரதாயப்படி தேர்ந்தெடுக்கப்படுகிருர். பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள தீவுப் பிரதிநிதிகள் அங்கத்துவம் வகிக்கும் முப்பத்தி மூன்று பேர் கொண்ட சபை, பிரதம மந்திரியைத் தெரிவு செய்கிறது. பிரதம மந்திரி தனது மந்திரிகளைத் தேர்ந்தெடுக்கிருர். முப்பத்தி மூன்று பேர் கொண்ட இந்தச் சபைதான் சட்டத்தை இயற்றுகின்றது. இச்சபையின் ஆயுட்காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

இப்படியொரு கட்டுரையில் மாலதீவைப்பற்றி எல்லாவற்றையும் சொல்வது மிகச் சிரமம். மாலதீவைப்பற்றி அதிகம் அறியாததால், நான் இங்குவரத் தீர்மானித்தபோது பலர் என்னைத் தடுத்து நிறுத்தினர்கள். இங்குள்ள இலங்கையராகிய நாம் மிக்க மகிழ்ச்சியுடன் வாழுகின்ருேம்.

எளிமையாகவும் திருப்தியுடனும் வாழும் மாலதீவு மக்கள் சமாதானமாகவும் சட்டத்துக்குப் பணிந்தும் நடக்கிருர்கள். அவர்கள் மத்தியில் வாழ்ந்து பணியாற்றுவதே ஒரு பேருகும்.

# இரு விபத்து

வெலிகாமம், வெள்ளி

திச என்ற இடத்திலிருந்து வந்துகொண்டிருந்த மோட்டார் கார் ஒன்று வல்கம என்ற இடத்தில் ஒரு கரத்தையுடன் மோதியதையொட்டி நடந்த பொலிஸ் விசாரணைக்குப் பின்னர், அந்தக் கார் திரும்பிச் சென்றுகொண்டிருந்த சமயம், மிரிசா என்ற இடத்தில் எதிர் நோக்கி வந்துகொண்டிருந்த லொறி ஒன்றுடன் மோதி சேதத்துக்குள்ளானது. காரில் இருந்த சாரதிக்கும் அதில் பிரயாணம் செய்த மற்றுமொருவருக்கும் பலமான காயங்கள் ஏற்பட்டதினல் அவர்கள் மாத்தறை ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கப் பட்டார்கள்.

## கேலிக் கூத்து

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கும்மாளம்போட்டுக் குதியன் குத்தாமலும், மற்றையோரை எள்ளி நகையாடாமலும் நல்ல பிள்ளைகளாக ஒழுகவேண்டுமெனவும் அவர் எச்சரிக்கை செய்திருந்தார்.

### பெரியாஸ்பத்திரியில்....

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நோயாளர் தொகை அதிகரித்திருப்பதால் விருந்தைகளில் அவர்கள் படுத்துறங்குவதை இப்போதெல்லாம் பார்க்க முடிகின்றது. அரசினர் புதிய கட்டடங்களை நிறுவி இடநெருக்கடியைக் குறைக்கலாமே என்று எண்ணிக்கொண்டிருக்கையில் நிருபர் ஒருவர் தெரிவித்த விபரம் கவலையை உண்டாக்கியது. பெரியாஸ்பத்திரியிலுள்ள இரண்டாம் 'வார்ட்' இப்போது காலியாக இருப்பதாகவும், இது முன்னர் பிரசவவிடுதியாக உபயோகிக்கப்பட்டதெனவும் அவர் தெரிவித்தார். இந்த வார்ட்டில் இருபத்தேழு கட்டில்கள் உள. சென்ற இருவாரங்களாக அந்த வார்ட் 'சும்மா' கிடக்கின்றதாம்!

## பாண்டுங் மகாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களாக நடத்தப்படுவதாக கூறப்பட்ட யோசனைகள் ஏற்கத்தக்கதல்ல" என்ருர்.

பஞ்சாப், தென்னுடு, மேற்கு வங்கம், உத்தரப்பிரதேசம் ஆகிய ராஜ்யங்களில் சிறு தொழில்கள் வளர்ச்சியடைந்திருப்பதாய் ஸ்ரீ நேரு குறிப்பிட்டார்.

10 ஆண்டுகள் பதவியிலிருந்தவர்கள் விலகவேண்டுமென காங்கிரஸ் தலைவர் திரு. சஞ்சீவி ரெட்டி கூறிய யோசனைகளை, கண்டிப்பாகக் கடைப்பிடிக்க முடியாதென்றும், இதனுல் அனுபவம் வாய்ந்த பலரது சேவை நாட்டுக்குக் கிடையாது போய்விடும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

"நடுநிலைமை அதிபர்களின் மகாநாடு நடைபெறவிருக்கையில், 2-வது பாண்டுங் மகாநாடு ஒன்றை நடத்தவேண்டுமென்ற இந்தோனேஷியாவின் யோசனை உசிதமானதாய்த் தெரியவில்லை" என்றும் நேருஜீ குறிப்பிட்டார்.

(மேல்விபரங்கள் 3-ம் பக்கம்)

## தாயும் மகளும் குத்திக்கொலை

கொழும்பு, வெள்ளி

ஹொரணை மாவட்டத்தைச் சேர்ந்த கெஸ்கமுவையில் ஒரு தாயும் மகளும் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டதாய் பொலிசுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

# தொகுதிகளில் விவசாயப்பண்ணை

கொழும்பு, வெள்ளி

ஒவ்வொரு தொகுதியிலும் விவசாயப்பண்ணைகள் அமைக்கும் திட்டத்தைத் துரிதப்படுத்தும்படி அரசாங்க அதிபர்களை பதில் விவசாய நீர்ப்பாசன மந்திரி திரு. எம். தென்னக்கூன் கேட்டுள்ளார்.

உபயோகமற்றுக் கிடக்கும் நிலங்களைக் குத்தகைக்குக் கொடுக்க நிலச் சொந்தக்காரர்கள் விரும்புவார்களென்றும் நிலங்களைச் சுவீகரிக்காமல் குத்தகைக்கு எடுத்து பண்ணைகளை அமைப்பது நல்லதென்றும் திரு. தென்னக்கூன் தெரிவித்துள்ளார்.

அரசாங்க அதிபர்கள் தங்கள் திட்டங்களை இம்மாத முடிவுக்குள் காணிக் கமிஷனருக்கு நேரடியாக அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு தொகுதியிலும் 50 ஏக்கர் நிலத்தில் பண்ணை ஆரம்பிக்கப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

## கல்ஓயா

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

படுகிறது. தற்காலிக காணி மந்திரி திரு. தென்னக்கூன், சிலதொழிலாளரைத்தற்காலிகமாக வேலையை விட்டு நிறுத்தியதன் காரணமாய், தொழிலாளர்களிடையே குழப்பம் ஏற்படக்கூடுமென கல்ஓயா நிர்வாகம் அஞ்சுவதாய்க் கூறப்படுகிறது. மந்திரி 21 பேரை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யும்படி உத்தரவிட்டதாயும், ஆனல் இதுவரை 5 பேர்மட்டுமே தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதாயும் கல்ஓயா சபை மனேஜரின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

## அரசாங்க ஊழியர் பிரச்சினை

### ஆலோசிக்க அவசர மகாநாடு

கொழும்பு, வெள்ளி

அரசாங்க ஊழியர்களைப் பாதிக்கக் கூடிய பல முக்கிய விஷயங்களைப் பற்றி ஆராய்வதற்காக ஜூலை மாதம் 8-ந் திகதி, ஓர் அவசரமகாநாட்டைப் பொதுச் சேவைத் தொழிற் சங்கம் கூட்ட முடிவு செய்திருக்கிறது. சுமார் 100, பொதுச் சேவைத் தொழிற் சங்கங்கள் இம்மகாநாட்டிற் பங்கு பற்றும்.

ஆலோசனைக்கு எடுக்கப்படும் விஷயங்களிற் சில வருமாறு:

உத்தியோக மொழி மாற்றத்தில், ஓய்வு பெற விரும்புவோருக்குப் பென்ஷன், உத்தியோகமொழியில் பரிச்சியம் உள்ளவர்களின், வேலைச் சுமையைக் குறைப்பதும் மற்றும்அதடனுன் தொடர்புடயனவும் 55 வயதில் அரசாங்க உத்தியோகஸ்தர் ஓய்வு பெறுதல்.

சம்பளக் கமிஷனின் அறிக்கையை வெளியிடுவதில் உள்ள தாமதம்.

வாழ்க்கைச் செலவுஅதிகரித்துச் செல்வதால் அதைக் குறைப்பதற்கு வாழ்க்கைப் படியை உயர்த்தல்.

அரசாங்க ஊழியர்களுக்குத் தொழிற்சங்கம், அரசியல் உரிமைகள்.

அரசாங்க ஊழியரை, எதிர் நோக்கியிருக்கும் பல்வேறுபிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டுமெனில் வேறுதொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்று தொழிற் சங்கங்களை அழைக்கும்போது அரசாங்கசேவைக் குமாஸ்தாக்கள் சங்கச் செயலாளர் திரு. ஜீ.ஜே விக்கிரம கூறினர்.

# துறைமுக வேலைகள் ஸ்தம்பிதம்

கொழும்பு, வெள்ளி

கடந்த இரண்டு தினங்களாக கொழும்பில் பெருமழை பெய்துகொண்டிருப்பதால், துறைமுக ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் தடைபட்டுள்ளன.

## கடிகாரம் திருடியவர்

### ரூ. 100 பிணையில் செல்ல உத்தரவு

மாவிட்டபுரம், வெள்ளி

சுன்ஞகத்தைச் சேர்ந்த வே. இரத்தினசிங்கம் என்பவர் ரூ. 115 பெறுதியான கைக்கடிகாரமொன்றைத் திருடியதாக சுன்ஞகம் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கில் மல்லாகம் நீதிபதி திரு.டபின்யூ.டி. தாமோதரம், இரத்தினசிங்கத்தை ரூ. 100 பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

## நாம் தமிழர் கட்சி

### எல்லா மாவட்டங்களிலும் போட்டியிடும்

சேலம், ஜூன் 29

வருகிற பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் நாம் தமிழர் கட்சி போட்டியிடுவதென்று கட்சியின் தலைமைப் பொதுக்குழு முடிவு செய்தது. பொதுக்குழுவின் கூட்டம் திரு. சி. பா. ஆதித்தன் தலைமையில் சேலத்தில் நடந்தது.

## தமிழ்நாட்டில் 170 லட்சம் வாக்காளர்கள்

சென்னை, ஜூன் 30

தமிழ் நாட்டில் வருகிற பொதுத் தேர்தலில் 170 லட்சம் வாக்காளர்கள் கலந்து கொள்வார்கள். தமிழ் நாட்டின் மொத்த ஜனத்தொகை 340 லட்சமாகும்.

## டிரினிடாட் பிரதமர்

புதுடில்லி, ஜூன் 30

புதுடில்லி வந்திருக்கும் டிரினிடாட் பிரதமர், இன்று திரு. வி. கே. கிருஷ்ணமேனனைச் சந்தித்துப்பேசினர்.

## ராஜஸ்தானில் 3 மந்திரிகள் ராஜினமா

புதுடில்லி, ஜூன் 30

ராஜஸ்தானில் 3 மந்திரிகள் ராஜினமாச் செய்துவிட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

## பிரமுகர்கள்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை சுங்க இலாகாவைச் சேர்ந்த உதவி பாதுகாப்பு அதிகாரி திரு. கே. சிவசுப்பிரமணியம், உதவி கலெக்டர் திரு. ஆர். நவரட்ணராஜா ஆகியோர் கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

## அந்தப் பல்

கொழும்பு, வெள்ளி

1959 ம் ஆண்டு இரத்தினபுரியில் கண்டெடுக்கப்பட்டு அங்குள்ள நூதனப் பொருட்காட்சியில் ஒப்படைக்கப்பட்ட ஒரு பெரியபல், விரிவான ஆராய்ச்சிக்குப்பின் ஒரு ராக்ஷஸ மனிதனுடையது எனக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதுபோல் உலகிலேயே வேறு இரண்டு பற்கள்தான் வெவ்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என தேசிய நூதனப் பொருட்காட்சி அதிபர் திரு. தெரனியகலே கூறினர்.

---

இவ்வாண்டு இந்தியாவில் 7,85,00,000 டன் தான்யம் உற்பத்தியாகும் என எதிர் பார்க்கப்படுகிறது.

∴ ∴ ∴

இந்திய அரசாங்கம் திரைப்பட ஆலோசனைக் கமிட்டி ஒன்றை நியமித்திருக்கிறது

∴ ∴ ∴

பக்துனிஸ்தான் சம்பந்தமாய் பொதுஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென லண்டனுக்கு விஜயம் செய்துள்ள ஆப்கன் பிரதமர் கூறினர்.



# மாணவர் மலர்



## வான சாஸ்திரம் உதயமாயிற்று

— பொ. சாரதா —

மனிதனாகப் பிறந்தவர்கள் யாவரும் நட்சத்திரம் பூத்த வானத்தைப் பார்த்துப் பரவசப்படாமல் இருப்பதில்லை. இப்படித்தான் ஆதி மனிதனும் வானத்தைப் பார்த்து மகிழ்ந்தான். அவனுக்கு நட்சத்திரக் கூட்டங்கள் மாயாஜாலங்களாகத்தான் தோன்றிற்று. ஆனால் காலம் செல்லச் செல்ல, அவன் மனம் விரிவடைந்து உண்மையை ஆராயத் தொடங்கியது.

இன்று ஈராக் என்று அழைக்கப்படும் பபிலோனிய தேசத்திலே, கி. மு. 3,000 அளவில் வான ஆராய்ச்சி ஆரம்பித்தது. வனத்திலே தோன்றும் பொருள்களின் மாற்றங்கள், அசைவுகள் உலகத்தைப் பாதிக்கின்றதென்று அக்கால மதம் நம்பிற்று. எனவே, மத குருக்கள் நாட்தவறாது, வானத்தை இராக்காலங்களில், உயர்ந்த கோபுரங்களில் இருந்து கவனித்தனர். கிரகணம், வால் நட்சத்திரம் போன்றவற்றால் நாட்டிற்குப் பஞ்சம், கொடு வியாதி, நீர்ப்பெருக்குப் போன்ற அழிவுகள் ஏற்படும் என்று பெரிதும் அஞ்சினார்கள் அக்காலத்தவர். எனவே இவற்றை முன்கூட்டியே மன்னருக்கு அறிவிப்பதற்காகவே, குருமார்கள் மன்னனின் ஆணைப்படி, வானத்தை ஆராய்ந்தனர்.

இதன் விளைவாக நடக்கவிருப்பதை முன்னதாகவே கூறுவது உருவாகியது. சந்திரனின் உதவி கொண்டு நேரத்தைக் கணிக்க ஆரம்பித்தனர். அமாவாசை அன்று மேற்குத் திசையிலே தோன்றும் சந்திரனைக் கொண்டு ஒவ்வோர் மாத ஆரம்பத்தையும் நிர்ணயித்தனர். சந்திரன் மாத்திரமன்றி, பல்வேறு நட்சத்திரங்களும் ஒரு குறிப்பிட்ட பாதையிற் சுற்றிச் சுற்றி வருகின்றன என்பதையும், ஒளியுள்ள நட்சத்திரக் கூட்டங்களின் உதவியாற் கண்டு பிடித்தனர். இவையாவும் ஒரு நாட் போன்ற பாதையைப் பின்பற்றுகின்றன என்று கண்டனர். அவற்றின் பாதைகளைப் பன்னிரண்டு பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் அண்மையிலுள்ள நட்சத்திரக் கூட்டங்களின் பெயரால் அழைத்தனர். பன்னிரண்டு பகுதிகளையும் ஒரு வருடத்தில் சூரியன் சுற்றி வருகிறதென்றும் வேகத்தில் மாற்றம் இல்லாவிட்டால் ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் ஒவ்வொரு பகுதியையும் தாண்டுகிறதென்றும் கண்டனர். ஆனால் சூரியன், சந்திரன் உட்பட எல்லா நட்சத்திரங்களின் வேகமும் மாறுதல் அடைந்தபடியேயிருந்தன.

இவற்றைக் கண்ணுற்று ஆராய, வான சாஸ்திரமும் சரித்திர வானில் உதயமாயிற்று.

இக்குறிப்புக்கள் யாவும், ஈரக் களிமண்ணால் ஆகிய ஓடுகளில் வரையப்பட்டு, அடுப்புகளிற் காயவைத்துப் பத்திரப் படுத்தப்பட்டன. புதைபொருளாராய்ச்சியாளரின் விடாமுயற்சியின் பேரில், இந்த ஓட்டுத் துண்டுகளில் தோன்றிய சித்திர எழுத்துகளுக்கு பொருள் காணமுடிந்தது

---

## காகிதப் படகு

ஒவ்வொரு நாளும் சலசல வென்று நெளிந்து சுழிந்து ஓடிக் கொண்டிருக்கும் நீரோடையில், நான் எனது காகிதப்படகுகளை மிதக்க விட்டுப் பார்ப்பேன்.

காகிதப் படகுகளில் பெரிய எழுத்துக்களில் என் பெயரையும் நான் வசிக்கும் ஊரின் பெயரையும் எழுதிவிடுவேன்.

வேறிடத்தில் இருக்கும் மனிதர்கள் யாராவது என் பெயரைப் படித்து நான் யார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்பது என் விருப்பம். எங்கள் தோட்டத்து மலர்களால் படகை நிரப்பி, மலர்கள் பாதுகாப்போடு அக்கரை போய்ச் சேர வேண்டுமென்று சதா பிரார்த்திப்பேன்.

நான் எனது படகுகளை மிதக்க விட்ட பிறகு, வான வெளியில் காற்றில் அடிபட்டு பொங்கி எழும் முகில்களைப் பார்ப்பேன்.

ஆனால் என் விளையாட்டுத் தோழர் முகில்களை என்படகுகளோடு போட்டியிட அனுப்பினார்கள் என்பது எனக்குத் தெரியாது.

இரவு வந்ததும், எனது காகிதப் படகுகள் நட்சத்திரங்களின் கீழ் கம்பீரமாக மிதந்து மிதந்து செல்லும் என்று கனவுலகில் சஞ்சரிப்பேன்.

துயிலின் தேவதைகள் அவற்றில் செல்கின்றன. அவை மலர்க் கூடைகளால் நிரப்பப் பட்டிருக்கின்றன.

—இரவிந்திரநாததாகூர்

---

**மாணவர்களே!**

**உங்கள் பள்ளிக்கூடத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் சுவையான வேறு செய்திகளையும், தாராளமாக எழுதியனுப்புங்கள்**

**சிலர், தமது விஷயங்களைத் தாளின் இரு பக்கங்களிலும் எழுதி அனுப்புகின்றார்கள். தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதவேண்டும் என்பதை அனைவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.**

த. பெ. எண். 49 — 'மாணவர் மலர்'

யாழ்ப்பாணம். — ஈழநாடு.

---

## விஞ்ஞானம் வளர்கிறது

கடிதங்களை எழுதி அதற்குரிய விலாசத்தையும் உறையில் எழுதிவிட்டு, தபால்பெட்டிக்குள் போட்டுவிடுகின்றோம். அது உரிய இடத்துக்குப் போய்ச் சேரும் என்ற நம்பிக்கை எமக்கு. ஆனால் நாம் எண்ணியபடி நாம் அனுப்பிய அக்கடிதம் உரிய இடத்தில் அடுத்தடுத்த நாளில் தான் போய்ச் சேருகின்றதோ, அல்லது ஓரிரு மாதங்களின் பின்னர் தான் போய்ச் சேருகின்றதோ இறைவனுக்குத் தான் தெரியும்.

பக்கத்திலே உள்ள ஊர் ஒன்றுக்கு அனுப்பிய கடிதமொன்று, ஒன்பது வருடகாலமாக ஊர்களையெல்லாம் சுற்றிவிட்டு, இறுதியில் அது சேர வேண்டிய ஊருக்குப் போய்ச் சேர்ந்ததாம். இச் செய்தியைப் பத்திரிகை ஒன்றில் படித்த ஞாபகம். இதற்குரிய சரியான காரணம் நமக்குத் தெரியாமல் விட்டாலும், அத் தாபால் படும் வேதனை தான் எவ்வளவு.

கடிதங்களின் உறைகளில் 'டைப்' அடித்திருக்கும் முகவரிகளைப் படித்து, அவை எந்த இடத்துக்குப் போகவேண்டுமோ அதை, அந்த இடத்துக் கடிதங்களோடு சேர்த்து வைக்கும் வேலையை தபாற்கந்தோர்களில் வேலை செய்யும் ஊழியர்கள் செய்கின்றனர். இது தான் நமது நாட்டிலும் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்தத் தொல்லை மிக்க வேலையை இயந்திரங்கள் செய்யக் கூடிய மாதிரிக்கு விஞ்ஞானிகள்' புதிய ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

வெர்ஜீனியாவிலுள்ள ஒரு கம்பனி, இந்த இயந்திரத்தைச் செய்திருக்கிறது. அந்த இயந்திரம், ஒரு விநாடிக்கும் மிகக் குறைந்த நேரத்தில், கடித உறையில் 'டைப்' அடித்திருக்கும் பெயரைப் படித்து விடுகிறது. எழுத்துக் கோடுகளின் நீளத்தையும், இடத்தையும் தடவிப் பார்த்து ஊர்ப் பெயர்களை அறிந்து கொள்கின்றது. வெவ்வேறு அளவுள்ள எழுத்துக்களையும் அந்த இயந்திரம் தெரிந்து கொள்ள முடியுமாம்.

'டைப்' அடித்திருக்கும் முகவரிகளைப் படிக்கும் இவ் இயந்திரம், பெரும்பாலான கையெழுத்து முகவரிகளையும் படிக்கக்கூடியவாறு அதை விருத்தி செய்யலாம் எனக் கருதுகின்றார்கள்.

—"ஞானி"

---

# அறிவுச் செல்வம்

— ஜி. எம். —

★ எல்லோருடைய வெறுப்புக்கும் இலக்காகி, நோய்களின் சின்னமென்று கருதப்படுகின்ற கரப்பான் பூச்சிகள் மிகமிகப் பழமையானவை. 200,000,000 ஆண்டுகளுக்கு மேலாக அவை எல்லாப் பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றன.

★ மனிதனகத்தின்மேல் இருப்பது மிகச்சிறிய ஒரு மின்சார விளக்காகும். இது மின் அணுப்பொறிகளிலும், மருத்துவ சாதனைகளிலும் பயன் படுத்தப் படுகிறது. இது 110 'வோல்ட்' சுற்றுக்களில் பயன்படுத்தப்படும்.

★ ஒரே சமயத்தில் 114 கருக்களைத் தன் வயிற்றில் பெற்ற ஒரு சுறுமீன் அண்மையில் ஹவாய் தீவுகள் அருகில் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் கரு ஒவ்வொன்றும் 10 அங்குல நீளம் பெற்றிருந்தது. இந்த கருக்கள் எல்லாம் சேர்ந்து 5கலன் கனஅளவு இருந்தன.

★ புதர்களையும், மரங்களையும் குட்டையாகவே வளரச் செய்யும் முயற்சியில் ஜப்பானியர்கள் பல நூற்றாண்டுகளாக ஈடுபட்டுள்ளார்கள். அளவில்தான் குட்டையாக இருக்குமே தவிர இவை பார்ப்பதற்கு முதுமை வாய்ந்த மரங்களைப் போலவே காட்சியளிக்கும். இதனால் ஒரு சிறிய அறைக்குள் பெரிய பூங்காவையே அடக்கி விடலாம்.

★ விலங்குகள் கம்பளிக்குரிய உரோமத்தைத் தயாரிக்கின்றன. பூச்சிகள் பட்டினை நூற்கின்றன. ஒரு செடி பருத்தியைத் தருகின்றது. இவற்றைப் போலவே நுண்மையான இழைகளாகப் பிரிக்கக் கூடிய கல்லொன்று உள்ளது. இந்த இழைகளிலிருந்து ஆடை நெய்யலாம். அந்த ஆடை நெருப்பால் எரிக்கப்படாது. 'அஸ்பெஸ்டஸ்' என்ற பெயருடைய இக்கல் பழங்காலத்திலேயே விளக்கெரிக்கவும், நெருப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும் பயன்படுத்தப்பட்டது.

★ ஆக்டிக் பகுதியில் தாவரங்கள் மிகவும் சிறுத்திருப்பதற்கு காரணம் மண்வளம், நீர்வளம் இல்லாமையுடன் வட சூரியனின் கொடிய வெம்மையுமே ஆகும்.

★ யுனெஸ்கோ அறிக்கையின் படி இன்று உலகில் 293,000,000 நாள் இதழ்களும், 335,000,000 ரேடியோக்களும் செய்திகளைத் தருகின்றன.

---

## விளையும் பயிரை முளையிலே தெரியும்

— மார்க்கண்டு இந்திராணி —

மாவீரன் நெப்போலியன், பிரான்ஸில் யுத்தம் நடைபெறும்போது, தாயின் கர்ப்பத்தில்இருந்தான். நெப்போலியனின் தந்தைபிரான்ஸுக்கெதிராகப் போராடியவன். யுத்தம் நடைபெறும் இடங்களில், தாயும் தங்கினாள். பித்தளையால் செய்த முப்பது பவுண்டு எடையுள்ள ஒரு சிறு பீரங்கி, நெப்போலியக் குழந்தையின் விளையாட்டுப் பொருள்களில் ஒன்றாகவிருந்தது. இவன்மனோபாவத்தில் பீரங்கிகளின் ஓசை செவிகளில் இனிமையாக ஒலித்தது. தாய் தந்தையர் கூறும் யுத்தக் கதைகளைக் கேட்டு அவன் உள்ளம் துள்ளியது.

பத்தாம் வயதிலே பிரஞ்சு ராணுவக் கல்விச் சாலையில் சேர்ந்து பயிற்சிபெறத் தொடங்கினான். ஒரு சமயம் பாடசாலையில் ஒரு குழந்தை புரிந்த குற்றத்திற்காக நெப்போலியனைத் தண்டித்தார்களாம். இவன் அக் குழந்தையைக் காட்டிக் கொடுக்காமல் தண்டனையை தானே பெற்றுக்கொண்டான். அக்குழந்தை மீதுள்ள நட்பினால் அப்படிச் செய்யவில்லை. பிழை செய்தவனைக் காட்டிக் கொடுத்தால் தான், பயந்து அப்படிக் காட்டிக் கொடுக்கிறான் என்று எண்ணிவிடுவார்களோ என்று தான் நெப்போலியன் அத்தண்டனையைச் சகித்துக்கொண்டானும்.

நெப்போலியன் பிறந்த பொழுது அவனின் தாயார் உபயோகித்த கட்டிலைச் சுற்றிப் போட்டிருந்த திரையில் ஹோமர் மகாகவியின் இதிகாசத்தில் உள்ள சில யுத்தக் காட்சிகள் சித்தரிக்கப்பட்டிருந்தனவாம். சிறுவனாக இருந்த போதே இதிகாசக் கதைகளில் அவன் உள்ளம் ஈடுபட்டிருந்தது. 'கையிலே வாளும் பையிலே ஹோமரும் இருந்தால் போதும்' உலகில் என் வழியை நான் வகுத்துக் கொள்ள, என்று கூறினான் மாவீரனாகிய நெப்போலியன்.

---

அழகிய பெனியன்! கால்மேஸ்!!

"லேடன்" தயாரிப்பு

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!

பல தினுசுகள்! பல அளவுகள்!!

எங்கும் கிடைக்கும்.

Leyden L.I.L

**இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!**

அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேகளை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது "லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்

தொழிற்சாலை

7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம்

## டி. ஆர். பி. காரர்கள் ஈடுபடத் தடை?

கொழும்பு, வெள்ளி

ஏற்றுமதி இறக்குமதித் தொழில்களிலும் விநியோக வர்த்தகத்திலும் டி. ஆர். பி. காரர்கள் ஈடுபடுவதைத்தடை செய்யும் ஒரு யோசனை பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

ஏற்றுமதி இறக்குமதித் தொழில் விநியோக வர்த்தகம் ஆகியவைகளை இலங்கையர் மயமாக்க வேண்டுமென்ற தேசிய வர்த்தக சபையின் கமிட்டி இவ்வருட ஆரம்பத்தில் அரசாங்கத்திடம் சமர்ப்பித்த ஒரு அறிக்கையில் தற்காலிக வாசகால பர்மிட்டில் இலங்கையில் வசிப்பவர்கள் ஏற்றுமதி, இறக்குமதி, விநியோகம் ஆகியவைகளில் ஈடுபடுவதைத் தடுக்கவேண்டுமென்று சிபார்சுசெய்திருந்தது.

இந்த சிபார்சு ஏற்றுக்கொள்ளப்பட்டால் இலங்கையில் இப்பொழுது வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பெருந்தொகையான தென்னிந்திய வர்த்தகர்கள் தங்கள் தொழில்களை இலங்கையர்களுக்காக விட்டுக்கொடுத்துவிட்டுத் தாயகம் திரும்பநேரிடும்.

இலங்கையின் வர்த்தகத் துறைகள் யாவும் இலங்கையர் மயமாகவே இருக்கவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்று வர்த்தக அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை வர்த்தகர்களுக்கு கடன் வசதிகள் வழங்குவது பற்றியும் வர்த்தக அமைச்சு பரிசீலனைசெய்வதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.


‘சிரநேத்திராஞ்சன தைலம்’
விடுதலையளிக்கும்போது
நீங்கள்
சிரசு கண் மூக்கு
சம்பந்தமான வியாதிகளினுல் துன்புறவும்
வேண்டுமா?
தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்தம்
ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்
ஆச்சரிய பலனையளிக்கும்!
காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு
கொள்ளவும்:
மு. க. ஜெகநாதன்
யூனானி கண் நிபுணர்
பெரியகடை யாழ்ப்பாணம்


# கண்டியில் விமான நிலையம்

## நிறுவுமாறு நகரசபை கோரிக்கை

கண்டி, வெள்ளி

யாத்திரீகர் மடம் ஒன்றைத் தலதா மாளிகைக்கு எதிரில் நிர்மாணிப்பதற்கு. செங்கடகல பௌத்த மண்டலயாவுக்குக் கண்டி நகரசபை ரூ. 25,000 அளிக்கும். போகம்பரை மைதானத்தில் நடைபெறவிருக்கும் பெரஹரா களியாட்டத்தையொட்டி ரூ. 50,000 சேர இருப்பதால், அதில் ரூ. 25,000ஐ அளிப்பதாக மேயர் சேர். பெர்னுட் சொய்சா சபைக்கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

திரு. திலக ரத்நாயக்கா பேசும்போது புதிய சபையின் முதலாவது கூட்டத்தில் வேலைகள் யாவும் சிங்களத்தில் நடத்தப்படல் வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதென்றும், அதன்படி நிகழ்ச்சி நிரலைச் சிங்களத்தில் அச்சிடும்படியும் கூறினர்.

திரு டி. பி. தென்னக்கூன் பேசும்போது நகரசபை ஓவர்சியர்ஒருவர் டெனிவெலவிலுள்ள ஒருவரைத் தாக்கியதாகவும், ஓவர்சியர்மாரைப்பற்றி இப்படிப் பலர் புகார் செய்திருப்பதாகவும், இவற்றை உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், கண்டிக்கருகில் விமான நிலையம் ஒன்று நிறுவ வேண்டும் என்று திரு. எச். எம். ஆர். பி. மாவில்மட கொண்டுவந்த தீர்மானமும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

## மைக்கல்மென் வெற்றி

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பு உதைபந்தாட்டக் கழகத்தின் ஆதரவில் நடைபெறும் சுற்றுப் போட்டிகளில் மைக்கல் மென் கோஷ்டிக்கும் டைனமோஸ் கோஷ்டிக்கும் நடந்த ஆட்டத்தில் மைக்கல் மென் ஆறு கோல்களைப் போட்டு இலகுவாக வெற்றியீட்டிக் கொண்டது.


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!!
எவை?
டொலர்
ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND
பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?
டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!
எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!
டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே உத்தரவாதமானது!
தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்,
மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்.
J. D. 3


# புதிய பாடசாலைகள் நிறுவும் மந்திரியின் கோரிக்கை

## அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை

கொழும்பு, வெள்ளி

மேலும் 700 புதிய பாடசாலைகள்நிறுவப்படவேண்டுமென்று கல்வி மந்திரி பதியுதீன் மாமூத் விடுத்த கோரிக்கை அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறவில்லை.

பாடசாலைகள் நிறுவுவதற்கு நிதி போதாதிருப்பதால் கிராம முன்னேற்றச் சங்கங்கள், மகில சமதிகள் போன்ற பொது ஸ்தாபனங்கள் பாடசாலைகளை நிறுவுவதற்கு ஊக்ககமளிக்கப்படவேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதிகரித்துவரும் ஜனத்தொகையின் தேவையைச் சமாளிப்பதற்கு கிராமப்பகுதிகளில் போதியளவு பாடசாலைகள் இல்லையென்றும் கிராமப் பகுதிகளில் பெரும்பாலான பாடசாலைகள் நிறுவக்கூடியதாக 700 புதிய பாடசாலைகள் அமைப்பதற்கு அடுத்த வரவுசெலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கவேண்டுமென கல்வி மந்திரி ஜனுப் பதியுதீன மாமூத் அரசாங்கத்திடம் கோரியிருந்தார்.

---

# இலங்கை பார்லிமெண்ட் குழுவினர்

## யு. எஸ். ஸில் பல இடங்களுக்கு விஜயம்

வாஷிங்டன், ஜூன் 29

அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்யும் இலங்கை பாராளுமன்ற குழுவினர் “கிராண்ட் கௌலீ அணைக்கட்டு” என்னும் உலகின் மிகப் பெரிய காங்க்ரீட் அணையை பார்வையிடுவர்.

கடந்த ஞாயிறன்று இரவு சால்ட்லேக் நகரிலிருந்து இங்கு வந்தசேர்ந்த பாராளுமன்றக் குழுவினர் கொலம்பியா பள்ளததாக்கு நீர்ப்பாசன திட்டத்தில் பன்னீராயிரம் பேருக்கு அமைக்கப்பட்டுள்ள கல்வி வசதிகள் தம்மை பெரிதும் கவர்ந்துள்ளதாக குறிப்பிட்டனர்.

இருபது வருடங்களுக்கு முன்னர் இந்த பிரதேசததில் ஒருசில குடும்பங்களே வாழ்ந்து வந்தன. ஆனல் இன்று ஐந்து லட்சத்திற்கு அதிகமான ஏக்கர் நிலம் நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதுடன், 4400 குடும்பங்களே இங்கு சொந்தப் பண்ணைகள் வைத்திருக்கின்றனர். இவர்கள் அமெரிக்க ராஜ்யங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் இங்கு வந்து குடியேறியுள்ளனர்.

விவசாய அமைச்சர் திரு ஸி. பி டி’ சில்வா தலைமையில் வந்துள்ள குழுவினர் உள்ளூர் ஆஸ்பத்திரி, மோஸஸ் லேக்உயர்தரப்பாடசாலை, பால்ப்பண்ணை, சீனி சுத்தரிக்குமிடம், நகரமண்டபம், தீயணைக்கும் நிலயம், பொலிஸ் இலாகா முதலான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்கள் திங்களன்று இரவு வர்த்தக சங்கத்தின் கௌரவ விருந்தினர்களாக இருந்தனர்.

“கொலம்பியா பள்ளத்தாக்கு நீர்பாசன திட்டம் எமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததொன்ருக இருக்கிறது” என ஜனப் பிரதிநிதிகள் சபை லிகிதர் திரு. ஆர். பி. டெரனியகல குறிப்பிட்டார். “நாங்கள் திங்களன்று பாடசாலையொன்றிற்கு விஜயம் செய்து, அங்கு வருங்கால சந்ததியினர் உலகின் ஏனைய பாகங்களில் கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த கல்வியை பயில்வதை பார்வையிட்டோம்” என்ருர்.

கொழும்பு மத்திய தொகுதி அங்கத்தவர் சேர். ராசீக்பரீத் “எனது தொகுதி மக்களும், இலங்கை நண்பர்களும், பாராளுமன்ற குழுவினர் பலவற்றை பயில்கிருர்கள் என்பதை அறிந்து பெருமிதம் கொள்வதை நினைக்குமிடத்து பெருமகிழ்ச்சியடைகிறேன்” என்ருர்.

# வானெலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

### சனி 1-7-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரைஇசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை, வயலின்.

இரவு 7-15 பாமாலை, 7-30 பேச்சு, 7-45 கே. தம்பு-பாட்டு 8-15 அறிவுச்சுழல், 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 இஸ்லாமிய கீதங்கள், 10-00 நேயர் விருப்பம்.

### ஞாயிறு 2-7-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரைஇசை, 8-00 கிறிஸ்தவ கீதங்கள், 8-30 பக்திப்பாடல்கள், 9-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-30 கதம்ப இசை, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்பகுதி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வி. சங்கரலிங்கம் - வயலின், 5-45 திரைக்குரல், 6-10 பக்திப் பாடல்கள், 6-30 நாளவாத்தியக் கச்சேரி.

இரவு 7-00 பேச்சு, 7-10 மாதர்கேட்டவை, 7-30 கண்டதும் கேட்டதும், 7-45 டி. எம். வேதார்ணயம் - பாட்டு, 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

### சனி 1-7-61

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 கும்பகோணம் டி. கே. ஜனர்த்தனம் - வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 2-10 கும்பகோணம் டி. கே. ஜனர்த்தனம் – வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 ‘நிழலும் ஒளியும்’ - நாடகம், 8-00 திரைப் படஇசை, 8-30 டெல்லி அஞ்சல், 9-30 அகிலபாரத சங்கீதம்.

### ஞாயிறு 2-7-61

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 டி. கே. நாகரத்னம்மாள் – புல்லாங்குழல், 8-15 டி. எம். சௌந்தரராஜன் - பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி – கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணி மலர், 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 சென்னை அஞ்சல்.

மாலை 4-45 விவிதபாரதி(ர்க நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பி. மலையப்ப சாஸ்திரி - பாட்டு, 8-30 டி. நாகரத்னம்மாள் – புல்லாங்குழல், 9-15 வாத்தியஇசை, 9-30 டெல்லி அஞ்சல், 9-45 ஒலிப்பதிவுகள்.

# "தாய் மொழிக் கல்வி, சமயக் கல்வி கட்டாயமாக்கப்படவேண்டும்"

## தேசீயக் கல்விக் கமிஷனுக்கு தலைமை ஆசிரியர்கள் மகஜர்

யாழ்ப்பாணம், சனி

பாடத்திட்டங்கள் மூலம் பாடங்களைத் திணிக்கக்கூடாதென்றும் சமயக் கல்வி தாய் மொழிக் கல்வி, கட்டாயமாக்கப்பட வேண்டுமென்றும் யாழ்ப்பாணம் தலைமை ஆசிரியர் சங்கம் இலங்கை தேசீய கல்விக் கமிஷனுக்கு அனுப்பியுள்ள மகஜரில் கூறியுள்ளது. அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

### மொழிகளுக்கு முக்கியத்துவம்

இலங்கைத் தேசியக் கல்வியில் தேசீய மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை முதற்கண் வற்புறுத்த விரும்புகின்ருேம். தேசீய மொழிகள் என்பது சிங்கள மக்களுக்குச் சிங்களம் போலத் தமிழ் மக்களுக்குத் தமிழ்மொழியாகும் என்பதே எமது கருத்தாகும். இரண்டாவது மொழியாகச் சிங்கள மக்கள் தமிழையும், தமிழ் மக்கள் சிங்களத்தையும் கொண்டால் இந்நாட்டிலுள்ள

தேசிய இனங்கள் ஒற்றுமையாகவும் சுபீட்சமாகவும் வாழ வழிவகுக்கப்படுமென்பது எமது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். உயர்தரக் கல்விக்குத் தேசீய மொழிகள் பயன்படக்கூடியதானவளர்ச்சியடையும்வரை ஆங்கிலம் துணைமொழியாக இருக்க வேண்டுமென்றே நம்புகின்ருேம். ஆங்கிலம் உலகமொழியாக இருந்துகொண்டு புத்தம் புதிய கருத்துக்களை உடனுக்குடன் கொடுத்துவருவதால், தொழில் விஞ்ஞானத் துறைகளிலும், கலை கலாச்சாரத் துறைகளிலும் உயர்தரக் கல்வி பெறுவதற்கு மிகவும் துணையாகும் என்று நம்புகின்ருேம். கலை, கலாச்சாரத் துறைகளில் மேலோங்க விரும்பும் சிங்கள தமிழ் மாணவர்கள் முறையே பாளி மொழியையும் சமஸ்கிருத மொழியையும் ஓரளவுக்குத் தெரிந்திருப்பது அவர்கள் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாகும். இந்தக் கருத்துக்களால் தாய்மொழியில் ஆரம்பக் கல்வியுடன் ஆரும் வகுப்புக்கு மேல் ஆங்கிலம் கட்டாயபாடமாக இருப்பதை வற்புறுத்த விரும்புகின்ருேம். சிங்களம், தமிழ், பாளி, சமஸ்கிருதம், ஹிந்தி இஷ்ட பாடமாகக் கற்பதற்கு 6-ம் வகுப்புக்கு மேல் இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளிலும் வசதிகள் செய்யப்படல் வேண்டும். ஒரு காலவரையறைக்குப் பின் தேசீய மொழிகளில் பல துறைகளிலும் புத்தம் புதிய மூதல்நூல்கள் தோன்றி வளரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதும், ஆங்கிலத்தையும் இஷ்டபாடங்கள் வரிசையில் சேர்த்துக்கொள்ளலாம்.

### குருகுலங்கள்; தபோவனங்கள்

பாடசாலைகள் தரப்படுத்தப்படல் வேண்டுமென்ருலும் ஒரு தரத்திலுள்ள பாடசாலை வேறு தரங்களுக்கு மாற்றப்படக்கூடியதான வசதிகள் சட்டத்தில் இருப்பது நல்லது. தனியார் முயற்சிக்கு முன்போல் வசதிகள் போதியளவு இல்லாமையால், பாடசாலைகளைக் கட்டாயப்படுத்திக் குறிப்பிட்ட தரங்களில் அமைத்து விடுதல் கல்வியின் பரந்த தன்மையையும், கல்வி வளர்ச்சியில் ஏற்படக்கூடிய புதிய திட்டங்களையும் நசுக்கி விடுதல் போலாகுமென அஞ்சுகிருேம். கல்வி நிலையங்களைச் சுயேச்சையாக வளர்ப்பதாகும், புதுமுறைகள் திட்டங்கள் வகுத்துப் பரிசோதனை செய்வதற்கும் அவாக்கொண்ட தலைமையாசிரியர்கள் இந்நாட்டில் இன்னும் சிலநாட்களில் அருகிவிடாது பாதுகாப்பது தேசீய கல்வி வகுப்போரின் பிரதான கடமையென்றுதான் நாம் கருதுகிருேம். அரசாங்க உதவி பெற்ற குருகுலங்கள் தபோவனங்கள் மொண்டிசோரிமுறைப் பாடசாலைகள், வர்தா கல்வித்திட்டப்பாடசாலைகள் தேசிய கல்வித் திட்டத்தில் இடம் பெறுவதைத் தலைமையாசிரியர்களாகிய நாம் நல்லதெனக் கருதுகிருேம். நிர்வாகத்துக்கு உதவியாக பிரதேசவாரியாகப் பிரித்தபோதிலும், மத்திய பொதுக்கல்விச் சபை தேசிய இலட்சியத்துடன் அவற்றைக் கண்காணித்தல் இந்நாட்டின் தேசீய ஒற்றுமைக்கு அவசியமாகும் என்றுதான் எண்ணுகிருேம். தேசிய கல்வித்திட்ட அமைப்பில் தோட்டப் பாடசாலைகளையும் சேர்த்துக்கொள்ளுதல் அவசியமாகும். அங்கு இரண்டாவது கட்டாயமொழியாகச் சிங்களம் இருக்கலாம். ஆங்கிலம் இஷ்டபாடமாக்கப்படுதல் உயர்தரக் கல்வியை அவாவும் பிள்ளைகளுக்கு மிகவும் துணைபுரியும்.

### பிரவேச வயது

பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கும்வயது 6 எனக் கூட்டப்படுவதெனில்குழந்தைப் பாடசாலைகள் உண்டாக்கப்படுதல்வேண்டும். நமது நாட்டின் பிள்ளைகள் உடல்வளர்ச்சி குறைந்தாலும் உளவளர்ச்சியை மிகச்சிறு வயதிலேயே பெற்றுவிடுகிருர்கள். வீடுகளில் ஒழுங்காக வளர்க்கப்படும் பிள்ளைகள் விஷயம் வேறு சாதாரண குடும்பங்களிலும் குறைந்த வாழ்க்கைத்தரமுள்ள குடும்பங்களிலும் வீடுகள் ஒழுங்காக இல்லாமையால் பிள்ளைகளின் உளவிருத்திக்கு உதவக்கூடிய நிலையங்கள் அவசியமாகின்றன. 18வயதுக்குமேல் அரசியல் உரிமை இருப்பதாலும், வாலிபப்பருவ உணர்ச்சி மேலோங்கி மனிதனுகும் தன்மை வர ுருப்பதாலும் பாடசாலைக் கல்வி தொடர்ந்து கொடுப்பது கஷ்டமாகிறது. கட்டாயக்கல்வி 14, 15 வயதுடன் முடிந்து, 18, 19 வயதில் பாடசாலைக் கல்வியும் பூர்த்தியாகுதல் பிள்ளைகளுக்கு நல்லதெனநம்புகிருேம்.எனவே சேரும் வயது 5 எனவும் பாடசாலை விடும் வயது 18 எனவும் இருத்தல் வரவேற்கத்தக்கது.

ஆண்களும் பெண்களும் ஆரம்பக்கல்வியை ஒருமித்துக் கற்கலாம். 14, 15 வயதுக்குமேல் கூட்டுக்கல்வி ஆசிய நாடுகளில் நல்லதல்ல. நல்ல கட்டுப்பாட்டுடன் பல்கலைக்கழகங்களில் ஆண்பெண் மாணவர்கள் கலந்து கற்பதால் சமூக முன்னேற்றம் உண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆரம்ப பாடசாலைகள் ஒரு நேரப் பாடசாலையாகவும், சிரேஷ்டபாடசாலைகள் இருநேரங்களிலும் கூடுதல்வேண்டும். பாடத்திட்டங்கள் மூலம் பாடங்களைத் திணிக்கக்கூடாது. பாடப்புத்தகங்களும் கட்டுப்படுத்தப்படல்வேண்டும். சமயக் கல்வி, தாய்மொழிக்கல்வி கட்டாயமாக்கப்படவேண்டும்.

8ம் வகுப்புவரை ஆரம்பக் கல்வி பெற்றபின் தொழில் முறைகளில் ஊதியம்பெறக்கூடியதான பயிற்சி பெறக்கூடியவர்களுக்கு, அத்தொழில்களில் செய்முறைப்பாண்டித்தியமுடையவர்களால் தொழிற் கல்வி கொடுக்கப்படல்வேண்டும். தொழிற்கல்வியாயினும் சரி, வர்தாக்கல்வியாயினும் சரி இலங்கைப்பிள்ளைகளுக்கு ஏற்ற முறையில் வகுக்கப்படல்வேண்டும். தொழில்நுட்பப் பாடசாலை நிறுவனங்கள் தொகுதிக் கொன்ருக இருப்பது நல்லது.

பிள்ளைகளுக்குப் பரீட்சை வேண்டும்தான். ஆனல் பரீட்சைதான் எல்லாம் என்ற உணர்ச்சி வளர்க்கப்படக்கூடியதாக அது அமையக்கூடாது. மாதப்பரீட்சை, தவணைப் பரீட்சை ஆசிரியர்களின் அவதானிப்பு எல்லாம் சேர்ந்து வகுப்பேற்றப்பரீட்சையாக அமைதல் வேண்டும்.

நூல்நிலையங்கள் பாடசாலைகள்தோறும், கிராமங்கள்தோறும் அமைக்கப்படல்வேண்டும்

### மார்க்கெட் விலை வாசிகள்

#### தங்கம், வெள்ளி

யாழ்ப்பாணம், திங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| புடத்தங்கம் | 104 - 50 |
| நகைப்பவுன் புதிது | 98 - 00 |
| " பழையது | 96 - 00 |
| தங்கப்பவுன் | 101 - 00 |
| அரைத்தங்கப்பவுன் | 55 - 00 |
| மூஸ்வெள்ளி தோலா | 2 - 25 |

#### காய் கறி

மார்க்கெட்டிங் இலாகா (யாழ்ப்பாணக்கிளை) இவ்வாரம், சில்லறையாக காய்கறிகளை விற்கும் விலை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| | | ரூ—ச |
|---|---|---|
| கோவா | ருத்தல் | 0 - 55 |
| புடலங்காய் | " | 0 - 18 |
| கத்தரிக்காய் | " | 0 - 38 |
| போஞ்சி(பட்டர்) | " | 0 - 65 |
| போஞ்சி(மற்றரகம்) | " | 0 - 65 |
| காரட் | " | 0 - 75 |
| லீக்ஸ் | " | 0 - 55 |
| சாம்பல் வாழைக்காய் | " | 0 - 15 |
| பிஞ்சுமிளகாய் | " | 0 - 60 |
| வெண்டைக்காய் | " | 0 - 45 |
| பொன்னங்காணி | " | 0 - 22 |
| வல்லாரை | " | 0 - 90 |
| பூசனிக்காய் | " | 0 - 14 |
| சுத்தமானநெய்போத்தல் | | 6 - 50 |
| நாட்டு பச்சை அரிசி (தலைவெட்டியது) | கொத்து | 0- 65 |
| புழுங்கல் அரிசி (தலைவெட்டியது) | கொத்து | 0- 75 |
| புளி | " | 0 - 85 |
| தேங்காய் எண்ணெய் | போத்தல் | 0 - 80 |
| எள் எண்ணெய் | " | 2 - 50 |
| வெள்ளைப்பூடு, (மார்க்கெட்நிலை) | ரூ. | 1 - 47 |

#### கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு (இந்தியா) | 0 - 33 |
| உருளைக்கிழங்கு (இத்தாலி) | 0 - 27 |
| மிளகாய் (1-ம் நம்பர்) | 1 - 23 |
| ஸயாம் மிளகாய் | 1 - 04 |
| சின்னச் சீரகம் | 0 - 97 |
| மஞ்சள் | 0 -58 |
| ஜப்பான் மல்லி | 0 - 95 |
| உளுந்து | 0 - 32 |
| பாசிப்பயறு | 0 - 36 |
| துவரம்பருப்பு | 0 - 30 |
| கடலைப்பருப்பு | 0 - 48 |
| சிந்தாமணிக் கடலை | 0 - 43 |
| பம்பாய் வெங்காயம் | 0 - 20 |
| வெள்ளைப்பூடு (பம்பாய்) ருத்தல் | 0 - 35 |

மிளகு 1 ருத்தல் ரூ. 3 - 22. (கட்டுப்பாட்டுவிலை இல்லை)

### கோர்ட்டுக்கருகே துர்நாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் கோர்ட்டுக்குக் கிழக்குப் பக்கமாக இருக்கும் சாக்கடைக்குள் பழைய மதுபானம் ஊற்றப்பட்டிருந்தமையால் அப்பக்கம் துர்நாற்றம் வீசியபடியிருந்தது. மதுபரிபாலன வழக்குகள் மூலம் அங்கு நிரம்பியிருந்த மதுபானம் நேற்று எடுத்து வெளியேயுள்ள இச் சாக்கடைக்குள் ஊற்றப்பட்டிருந்தன


கிங்ஸ்லி பிளாஸா வெம்பிளி
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கண்டி)




பிரேம் நஸீர், ராகினி, வீரப்பா, எம். என். ராஜம், வி. ஆர். ராஜகோபால் நடித்த
இருமனம் கலந்தால் திருமணம்
பின்னணி: சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, எஸ். ஸி. கிருஷ்ணன், ராகவன், ஜமுனு ராணி.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 5-15 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-15 மணிக்கும்
1-7-61 முதல்
சிவாஜி கணேசன் — பத்மினி
நடித்த
அமரதீபம்

மனேஹரா (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-30 மணிக்கும் மாலை 5-30மணிக்கும்
ஜெமினி கணேசன், சாவித்திரி
நடித்த
அதிசயத் திருடன்

Sons and Lovers
(Adults only)
சன்ஸ் அன்ட் லவர்ஸ்
(வயது வந்தவர்களுக்குமட்டும்)
பிற்பகல் 2, 3-45 சனி, ஞாயிறு காலை 10-30

வெகுவிரைவில்
சினிமாஸ் திரைகளில்
ஜெமினி கணேசன்-பத்மினி
தங்கவேலு
மற்றும் பலர் நடித்த
மதுரம் பிக்சர்ஸாரின்
மீண்ட சொர்க்கம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.